வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ————— ඊළනාඩු

MARUTHI MONEY EXCHANGE
மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 25.07.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 227 | பக்கங்கள் : 16

## மனித புதைகுழி விவகாரம்:

# வெள்ளிக்கிழமை வடக்கு, கிழக்கில் பூரண ஹர்த்தால்!

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கங்கள் அழைப்பு

முல்லைத்தீவு, ஜூலை 25

**கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்தில் நீதி கோரியும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வடக்கு, கிழக்கு தழுவிய பொது முடக்கத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

அத்துடன், அன்றைய தினம் முல்லைத்தீவின் வட்டுவாகல் பாலத்திலிருந்து மாவட்ட செயலகம் வரை பேரணி ஒன்றும் நடைபெறவுள்ளது. இந்தப் பேரணியில் அனைத்து தரப்பினரையும் பங்கேற்குமாறு வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த முழு கதவடைப்பு போராட்டத்தை அரசியல் கட்சிகள் எவ்வித 15

## "பொது வாக்கெடுப்பு அவசியமானது"

கொழும்பு, ஜூலை 25

ஆயுட்காலம் நிறைவடைந்து கலைந்த உள்ளூராட்சி சபைகளை மீண்டும் கூட்டுவதானால் பொது வாக்கெடுப்பு அவசியம் என்று சட்ட மாஅதிபர் சஞ்சய் ராஜரட்ணம் உச்சநீதிமன்றுக்கு அறிவித்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த 15

## பி. பி. சி. செய்தி வாசிப்பாளர் ஜோர்ஜ் அழகையா காலமானார்!



லண்டன், ஜூலை 25

பி. பி. சி. தொலைக்காட்சியின் செய்தியாளரும் புகழ்பெற்ற செய்தி வாசிப்பாளருமான ஜோர்ஜ் அழகையா தனது 67 ஆவது வயதில் காலமானார். புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர் நேற்று திங்கட்கிழமை உயிர் பிரிந்தார்.

இலங்கையின் அம்பாறை - கல்முனையை சேர்ந்த இவர், சிறு வயதிலேயே ஆபிரிக்க நாடான கானாவிலும் பின்னர் இங்கிலாந்திலும் குடியேறினார். இந்த நாடுகளிலேயே கல்வி கற்ற அவர், 1989இல் பி. பி. சி. தொலைக்காட்சியில் இணைந்தார்.

ஜோர்ஜ் அழகையா, 2004 டிசெம்பர் சுனாமி 15

## போர் குற்றங்களில் ஈடுபட்டோருக்கு பிரிட்டன் தடை விதிக்க வேண்டும்!

### பிரிட்டன் எம். பிக்கள் வலியுறுத்து



லண்டன், ஜூலை 25

போர் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவற்றில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதிக்க வேண்டும் - பிரிட்டனின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கறுப்பு ஜூலை கலவரத்தின் 40ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் பிரித்தானிய பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பிரிட்டன் தமிழ் 15

## 13இன் பொலிஸ் அதிகாரத்தை நீக்குவதற்கு 22ஆவது திருத்தம்!

### கம்மன்பில கொண்டு வருகிறாராம்!



கொழும்பு, ஜூலை 25

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள பொலிஸ் அதிகாரத்தை நீக்குவதற்கு 22ஆவது திருத்தச் சட்டத்தை அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் தான் சமர்ப்பிக்கவுள்ளார் என்று உதய கம்மன்பில தெரிவித் துள்ளார்.

பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அவர் தனிநபர் பிரேரணையாக இந்தத் திருத்தத்தை கொண்டு வரவுள்ளதாகத் தெரிவித்தார்.

அவரின் கட்சியின் தலைமை 15

## சடலத்துடன் அம்புலன்ஸில் தடுத்து வைக்கப்பட்ட பெண்!

யாழ்ப்பாணம், ஜூலை 25

சடலத்தை அம்புலன்ஸில் ஏற்றியதாகக் கூறி அதிலிருந்து இறங்க விடாமல் தாயார் ஒருவர் காக்க வைக்கப்பட்ட சம்பவம் யாழ்ப்பாணத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது -

நெடுந்தீவில் தாயார் ஒருவர் குழந்தைக்கு பாலூட்டியபோது புரைக்கேறி மூர்ச்சையானது. இதையடுத்து, பெற்றோர் உடனடியாக நெடுந்தீவு பிரதேச மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். குழந்தையை பரிசீலித்த மருத்துவர் குழந்தை உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்தார்.

குழந்தையின் சடலத்தை சட்டவிதிகளின் 15

## முதல் அரசியல் படுகொலையை தூண்டியவர் அமிர்தலிங்கமே!

### கருணாகரம் எம். பி.

மட்டக்களப்பு,ஜூலை 25

முதல் அரசியல் படுகொலை அல்பிரட் துரையப்பா. அவரை சுட்டுக் கொன்றது பிரபாகரன். அதனைத் தூண்டியவர் அமிர்தலிங்கம். யாழ்ப்பாணத்தில் மேடையில் ஒருமுறை அமிர்தலிங்கம் சொன்னார், "துரையப்பாவுக்கு இயற்கை மரணம் நிகழாது", என்றார். அதைத் தொடர்ந்தே அல்பிரட் துரையப்பா கொல்லப்பட்டார். அல்பிரட் துரையப்பா முதலாவது அரசியல் படுகொலை. பிரபாகரன் கடைசி அரசியல் படுகொலை என்பது துரதிர்ஷ்டமானது.

- இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.களுவாஞ்சிக்குடி 15

## 13 தொடர்பில் பெரமுனவின் நிலைப்பாட்டை முதலில் ஜனாதிபதி வெளிப்படுத்த வேண்டும்

### சுதந்திர மக்கள் சபை ஒத்துழைக்க தயாராம்

கொழும்பு, ஜூலை 25

தமிழர்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றுவதற்காக சர்வகட்சி என்ற நாடகத்தை அரங்கேற்ற முன்னர் பொதுஜன பெரமுனவின் நிலைப்பாட்டை அவர்களுடன் பேசி ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும் என்று சுதந்திர மக்கள் சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறு தெரிவித்த, அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் 13 ஆவது திருத்தம் ஊடாக தமிழர்களின் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்குமாயின் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்றும் கூறினார்.

சுதந்திர மக்கள் சபையின் தலைமைப் பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது பல பிரச்னைகளை தோற்றுவித்துள்ளது என 15

## ஐ. எம். எவ். கடன் மறுசீரமைப்பை எதிர்கொள்ள இலங்கை தயார்!

### நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஜூலை 25

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் மேற்கொள்ளப்படவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின்(ஐ. எம். எவ்.) கடன் மீளாய்வுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க முடியுமென அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்கான பாராளுமன்ற செயல்பாடுகளில் 80 வீதமானவை தற்போது நிறைவடைந்துள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பந்தயம் மற்றும் சூதாட்ட வரியை மறுசீரமைப்பதற்கான நடைமுறைகளை 15

## இப்படியும் நடக்கிறது

'உன்னிடம் இரண்டு கடிதங்கள் கொடுத்தேனே, அவற்றைக் கவனமாக 'போஸ்ட்' செய்து விட்டியா?' என்று கேட்டார் முதலாளி.

'நீங்கதான் கவனக் குறைவாக அமெரிக்கா போக வேண்டிய கடிதத்தில் இருநூறு ரூபாய் முத்திரையையும் கொழும்புக்கு போக வேண்டிய கடிதத்தில் இரண்டு ரூபாய் முத்திரையையும் ஒட்டி இருந்தீர்கள்' என்றான் வேலைக்காரன்.

'சரி, சரி, முத்திரையை மாற்றி ஒட்டி அனுப்பி விட்டாய் அல்லவா?' என்றார் முதலாளி.

'ஒட்டி இருந்த முத்திரையை கழட்ட முடியல்ல. அதனால் விலாசத்தை மட்டும் அழித்து மாற்றி எழுதி அனுப்பி விட்டேன்' என்றான் அந்த புத்திசாலி வேலைக்காரன்.

இந்தக் கதைக்கும் இனி எழுதப்போகின்ற விடயத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

லண்டனிலிருந்து நண்பர் ஒருவர் குறுந்தகவல் ஒன்றை அனுப்பியிருந்தார்.

பதின்மூன்றாவது அரசியலமைப்புச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றில் மூன்றில் இரண்டு ஆதரவு தேவை என்றும் அது தன்னிடம் இல்லை எனவும் கடைசியாக நடந்த தமிழ் எம்.பிக்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் தெரிவித்திருந்தார் அல்லவா. அதுகுறித்து பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தமிழரசு கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் ஐயாவோ, ஏற்கனவே, அரசியலமைப்பில் இருக்கும் பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு பாராளுமன்றில் மூன்றில் இரண்டு ஆதரவு தேவையில்லை என்றும், நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி தனக்கு இருக்கும் அதிகாரத்தை பயன்படுத்தியே அதனை அமுல்படுத்த முடியும் எனவும் தெரிவித்திருந்தார்.

அது குறித்தே அந்த லண்டன் நண்பர் தனது சந்தேகத்தை கேட்டிருந்தார்.

'சம்பந்தன் சொல்வது சரியென்றே தெரிகின்றது. ஏற்கனவே, மூன்றில் இரண்டு ஆதரவுடன் கொண்டுவரப்பட்ட பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு எதற்கு மீண்டும் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு ஆதரவு தேவை' என்று கேட்டிருந்த அந்த நண்பரே மற்றுமொரு சந்தேகத்தையும் கேட்டிருந்தார்.

அதாவது, ரணில் அந்தக் கூட்டத்தில் தன்னிடம் மூன்றில் இரண்டு ஆதரவு பாராளுமன்றில் இல்லை என்றும் அதனால் சில விடயங்களை நிறைவேற்ற முடியாது எனவும் அவர் சொல்லியபோது, 'எதிர்க்கட்சிகளின் சட்டமா அதிபர்' என்று வர்ணிக்கப்படும் நமது சுமந்திரனும் அங்கே இருந்தார். சம்பந்தன் சொல்வது சரி என்றால் சுமந்திரன் எதற்காக அந்தக் கூட்டத்தில் ரணில் சொன்ன தகவலை மறுத்துரைக்கவில்லை?

இதுதான் லண்டன் நண்பருக்கு ஏற்பட்ட சந்தேகம்.

அவருக்குள் இவ்வாறான ஒரு கேள்வி ஏற்பட்டது நியாயமானதுதான். அதுவல்ல முக்கியமானது, அந்தக் கூட்டத்துக்கு மறுநாள் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த சம்பந்தன் ஐயா, எதற்கு மூன்றில் இரண்டு தேவை என்று கேட்டார். ஆனால், ரணில் அதுபற்றி கூறிய போது அங்கே சுமந்திரன் மாத்திரமல்ல, சம்பந்தன் ஐயாவும் இருந்தாரல்லவா? அப்போது ஏன் அவர் உடனேயே அதனை கேள்விக்கு உட்படுத்தவில்லை என்பது தெரியவில்லை.

ஆனால், இது பற்றிய தெளிவை தமிழ் மக்களுக்கு தெரிவிக்கவேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் குறிப்பாக சுமந்திரன் போன்றவர்களின் கடமை.

கடந்த இரண்டு தினங்களாக மாகாண சபைகளுக்கான அதிகாரம் குறித்து யாழ். பல்கலைக்கழக முன்னாள் சட்ட பீடத் தலைவர் தெரிவித்த கருத்து தொடர்பாகவும், தற்போதைய சட்ட பீட தலைவர் கோசலை மதன் தெரிவித்த கருத்து குறித்தும் பிரஸ்தாபித்திருந்தோம்.

தற்போதைய பீடத்தலைவர் யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றிய காணொலி முகநூலில் பகிரப்பட்டிருப்பது குறித்தும் குறிப்பிட்டிருந்ததை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள். அந்த காணொலி பற்றிய முன்னூட்டங்களை எழுதும் சிலர், அவர் எதிர்காலத்தில் பல்கலைக்கழகத்தில் உயர் பதவிகளை பெறுவதற்காகவே அப்படி பேசியிருப்பதாக எழுதிவருவதை காணமுடிந்தது.

அவர் பதவிக்காகவே அவ்வாறு கூறிகிறார் என்றால், இதற்கு முன்னர் அவரின் பதவியில் இருந்தவர்களும் அப்படி ஏதாவது செய்துதான் அந்தப் பதவிக்கு வந்தார்களா என்று கேட்காமல் இருக்கமுடியவில்லை.

**- ஊர்க்குருவி.**

## பாப்பரசரின் பிரதிநிதி யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், ஜூலை 25

பாப்பரசர் பிரான்சிஸின் இலங்கைக்கான பிரதிநிதி வண. கலாநிதி பிறாயன் ஊடக்வே யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார் என்று யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் அறிவித்துள்ளார்.

பாப்பரசரின் பிரதிநிதி மூன்று நாள் அப்போஸ்தலிக்க பயணமாக யாழ்ப்பாணத்துக்கு நேற்று திங்கட்கிழமை வருகை தந்துள்ளார்.

இன்று செவ்வாய்க்கிழமை குருநகர் புனித யாகப்பர் ஆலய திருவிழாவிலும் நாளை புதன்கிழமை இளவாலை புனித அன்னாள் ஆலயத் திருவிழாவிலும் பங்கேற்பார்.

அத்துடன், தீவக மறைக் கோட்ட பங்குகளையும் நேரில் சென்று பார்வையிடுவார். அத்துடன், முல்லைத்தீவு மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களையும் இடங்களையும் தரிசிப்பார். சுனாமி நினைவாலயத்தில் இயற்கை அனர்த்தத்தால் உயிரிழந்தோருக்கான அஞ்சலி நிகழ்விலும் பங்கேற்பார்.

மேலும், பிறாயன் ஊடக்வே ஆண்டகை யாழ்ப்பாணம் நகரில் தங்கியிருக்கும் காலத்தில் குருக்கள், துறவிகள், பொதுநிலை இறைமக்களைச் சந்திப்பதுடன், புனித மடுத்தினார் குருமடம், புனித சவேரியார் குருமடம், செபமாலை தாசர் சபை ஸ்தாபகர் இறை அடியார் தோமஸ் அடிகளாரின் கல்லறைக்கும் செல்லும் அவர், யாழ்ப்பாணத்தின் பிரசித்தி பெற்ற இடங்களையும் பார்வையிடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-றி)

## யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சிறப்புற நடந்த உணவுத் திருவிழா!

யாழ்ப்பாணம், ஜூலை 25



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்தில் சுற்றுலா விருந்தோம்பல் முகாமைத்துவ கற்கைகள் துறை இரண்டாம் வருட மாணவர்களின் ஏற்பாட்டில் உணவுத் திருவிழா நேற்று நடைபெற்றது.

திருநெல்வேலி பால்பண்ணையில் அமைந்துள்ள முகாமைத்துவ மற்றும் வணிகபீட வளாகத்தில் நேற்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது.

உணவுத் திருவிழாவை யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீட பீடாதிபதி பா. நிமலதாசன், சுற்றுலா விருந்தோம்பல் முகாமைத்துவ கற்கைகள் துறைத்தலைவரான சி. சிவேசன் உள்ளிட்ட விரிவுரையாளர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் கலாசார உணவு வகைகள் மற்றும் மேலைத்தேய உணவு வகைகள், குடிபானங்கள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

இரண்டாம் ஆண்டு, முதலாம் அரையாண்டில் கல்வி கற்கும் மாணவர்களின் முயற்சியாண்மையை விருத்தி செய்யும் நோக்கில் குறித்த செயல் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(ஐ)

## ரயில் சாரதிகளின் போராட்டம் நிறுத்தம்!

கொழும்பு, ஜூலை 25

ரயில் சாரதிகளின் தொழில் சங்க போராட்டம் நேற்று மாலையுடன் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து நேற்று மாலை முதல் ரயில் சேவை வழமைக்கு கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் பகல் முதல் ரயில் சாரதிகள் தொழிற்சங்க போராட்டத்தை ஆரம்பித்தனர்.

(ஐ)

## உள்ளூராட்சி மன்றங்களின் தற்காலிக பணியாளருக்கு விரைவில் நியமனம்!

கொழும்பு, ஜூலை 25

உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அவ்வாறான ஊழியர்கள் தொடர்பான தகவல்கள் தற்போது சேகரிக்கப்படுவதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் தற்போது 12 ஆயிரம் வெற்றிடங்கள் காணப்படுகின்ற நிலையில், அவற்றை நிரப்புவதற்காக தற்காலிக மற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கு அமைச்சரவையின் அனுமதியை பெற்றுக் கொள்ளவுள்ளதாக ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் தற்போது தற்காலிகமாகவும் ஒப்பந்த அடிப்படையிலும் 10 ஆயிரம் ஊழியர்கள் பணி புரிந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேர்தல் கண்காணிப்பு குழுக்களின் மனுமீதான விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 25

உரிய வகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படாததால் பொதுமக்களின் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவின் பரிசீலனை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாளைய தினத்துக்கு இந்த மனு மீதான பரிசீலனையை ஒத்திவைப்பதற்கு உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் பவ்ரல் எனப்படும் சுயாதீனமானதும் நீதியுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் ஆகியன இந்த மனுவை தாக்கல் செய்துள்ளன.

நேற்றைய தினம் இந்த மனு, புவனேக அலுவிகார தலைமையிலான ஐவரடங்கிய நீதியரசர்கள் ஆயத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்தது. எனினும், நீதியரசர்கள் ஆயத்தின் உறுப்பினரான நீதியரசர் பிரியந்த ஜயவர்தன மற்றுமொரு வழக்கு விசாரணையில் ஈடுபட்டிருந்தமையால் இந்த மனு மீதான விசாரணை நாளை புதன்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஈழநாடு
Eelanadu
25.07.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 09

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணில் தீர்வு தருவாரா?

ரணில் விக்கிரமசிங்க அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார். இதன்போது, 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயம் ஆராயப்படவுள்ளது. தற்போதுள்ள சூழலில், அனைத்துக் கட்சிகளின் ஆதரவு இதற்கு கிடைக்குமா என்பது சந்தேகமே! ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரையில், தன்னை அனைத்துக்கும் ஆதரவானவராகக் காண்பித்துக் கொள்கின்றார். இதன்மூலம் தான் தீர்வுக்கு தயாராக இருக்கிறார் என்றும் அனைத்து கட்சிகளும் உடன்பட்டால், அதில் தனக்கு ஆட்சேபனை இல்லையெனவும் கூறுகின்றார். இதன்மூலம் தமிழ் மக்களுக்கு ஆதரவானவராக அவர் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கின்றார். ரணில் ஒப்பீட்டடிப்படையில் விடயங்களை உரையாடக் கூடியவர்தான். ஆனால், அவர் எந்தளவு தீர்வு விடயத்தில் உறுதியாக இருப்பார் என்பதில் சந்தேகம் கொள்ளாமல் இருக்க முடியாது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், அரசியல் தீர்வு விடயத்தில் போதிய அனுபவங்கள் உண்டு. ஒரு கட்சி ஆதரிப்பதை ஏனைய கட்சிகள் எதிர்ப்பதுதான் இலங்கைத் தீவின் வரலாறு. இந்த நிலையில், அனைத்து கட்சிகளின் உடன்பாட்டோடுதான் விடயங்கள் செய்யப்பட வேண்டுமென்றால் அதன் சாத்தியம் கேள்விக்கு உரியது. தற்போதுள்ள சூழலில், ஜனாதிபதித் தேர்தலே ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான இலக்காகும். இந்த நிலையில், 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக அவர் கூறினாலும்கூட, ஏனைய கட்சிகளை காரணம் காண்பித்து விடயங்களை மீளவும் கிடப்பில் போடவே வாய்ப்புண்டு.

இந்தச் சூழலை தமிழ் கட்சிகள் எவ்வாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்? தமிழர்களால் விடயங்கள் குழப்பியதாக இருக்கக்கூடாது. ஏனெனில், பொலிஸ் அதிகாரத்தை முன்வைத்து விவாதங்கள் இடம்பெறலாம். இப்போதே, உதயகம்மன்பில அணியினர் பொலிஸ் அதிகாரத்தை நீக்குவதற்கான திருத்தச் சட்டமொன்றை கொண்டுவரப் போவதாகக் கூறுகின்றனர்.

இந்த நிலையில் பொலிஸ் அதிகாரத்தை முன்வைத்து, அனைத்து கடும்போக்கு தரப்புகளும் ஓரணியாகலாம். அவர்கள் எவ்வாறு வேண்டுமானாலும் செயல்படட்டும். அது அவர்களின் பிரச்னை. ஆனால், தமிழ் கட்சிகள் பந்தை ரணிலின் பக்கமாக வீசிவிட்டு அமைதியாக இருப்பதுதான் இன்றைய சூழலை எதிர்கொள்வதற்கு உகந்தது. முதலில் விடயங்களில் சிலவற்றை செய்து காண்பியுங்கள். நம்பிக்கையை உறுதிப்படுத்துங்கள். பின்னர், விடயங்களை மேற்கொண்டு முன்னெடுப்போம் என்பதே, தமிழ் கட்சிகளின் நிலைப்பாடாக இருக்க வேண்டும்.

அதேவேளை, எதிர்கட்சிகளும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எந்தளவுக்கு ஆதரவு வழங்குவார்கள் என்பதில் சந்தேகம் உண்டு. இந்த விடயங்களை கணிக்காமல் ரணில் விடயங்களை கையாள முற்படவில்லை. புதுடில்லி பயணத்தைத் தொடர்ந்து உடனடியாகவே அனைத்துக் கட்சிகளை அழைக்கின்றார். அதேவேளை அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான சூழலையும் ஆராய்கின்றார். இந்தப் பின்புலத்தில் அனைத்து தரப்புகளும் அவர்களுக்குத் தேவை. இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்கவால், அரசியல் தீர்வு விடயத்தில் முன்னோக்கி பயணிக்க முடியுமென்று நம்புவது கடினமானது. ஆனாலும் ரணில் பேசுவதற்கு அழைத்தால் பேசத்தான் வேண்டும் - அதேவேளை 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் தமிழர் தரப்புக்கள் தங்களின் உடன்பாட்டை காண்பிக்கத்தான் வேண்டும். இது ரணிலை நம்புவதா அல்லது இல்லையா என்னும் விடயமல்ல - மாறாக, நமக்கு முன்னாலுள்ள சூழலை கையாளுவதா அல்லது இல்லையா என்பதாகும்.

# 1983இன் காயங்கள் இன்னமும் ஆறவில்லை!

## கனடா தூதுவர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 25

1983ஆம் ஆண்டின் காயங்கள் இன்னமும் ஆறவில்லை என்று இலங்கைக்கான கனடா தூதுவர் எரிக் வோல்ஸ் தெரிவித்துள்ளார்.

கறுப்பு ஜூலையின் நாற்பதாவது வருடத்தை குறிக்கும் விதத்தில் ருவிற்றரில் பதிவிட்டுள்ள கருத்தில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

40 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் பல பகுதிகளில் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளை நாங்கள் நினைவுருகின்றோம். 1983ஆம் ஆண்டின் காயங்கள் இன்னமும் ஆறவில்லை.

இந்த பயங்கரமான நினைவுகள் இடம்பெற்றன என்பதை அங்கீகரிப்பதும் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூருவதும் இலங்கையில் அனைவரையும் உள்ளடக்கிய நிரந்தர செழிப்புக்கான முக்கிய நடவடிக்கையாகும். இந்த இலககுகளை நோக்கிய செயற்பாடுகளை முன்னெடுக்கும் அனைவரையும் நாங்கள் முழுமையாக ஆதரிப்போம் - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# கறுப்பு ஜூலையை நினைவுகூர்ந்த கனடா தூதுவருக்கு கண்டனம்!

## சரத் வீரசேகர எம். பி. தெரிவித்தார்



கொழும்பு, ஜூலை 24

படுகொலைகளை தெரிவு செய்து கண்டிப்பது அந்த நபரின் நாகரிக இயல்புகளை கேள்விக்கு உட்படுத்துவதாகும் என்று கூறியுள்ளார் சரத் வீரசேகர எம். பி.

கறுப்பு ஜூலை கலவரத்தை நினைவுகூர்ந்து கனடா தூதுவர் வெளியிட்ட ருவிற்றர் பதிவுக்கே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், “1983ஆம் ஆண்டு ஜூலையின் பின்னர் தமிழ் காடையர் கும்பல்களால் வடக்கிலிருந்து துரத்தப்பட்ட ஆயிரத்துக்கும் அதிகமான சிங்களவர்கள், தமிழர்களை நாங்கள் நினைவுகூருகின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் சிங்கள கர்ப்பவதி தாய்மார் கொல்லப்பட்டதையோ அநுராதபுரத்தில் 200 யாத்திரீகர்கள் கொல்லப்பட்டதையோ அரந்தலாவையில் இளம் பிக்குகள் கொல்லப்பட்டதையோ, ஆயுதமேந்தாத சரணடைந்த 600 பொலிஸார் தமிழ் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டதையோ கனடா தூதுவர் கண்டித்ததாக நாங்கள் கேள்விப்படவில்லை.

படுகொலைகளை தெரிவு செய்து கண்டிப்பது அந்த நபரின் நாகரிக இயல்புகளை கேள்விக்கு உட்படுத்துவதுடன் அவர் களின் இரகசிய நிகழ்ச்சி நிரல்களை அம்பலப்படுத்துகின்றது - என்றும் கூறியுள்ளார். (ஐ)

# முட்டைகளின் எடைக்கு விலை நிர்ணயிக்க முடிவு


கொழும்பு, ஜூலை 25

முட்டைகளை நிறுத்து விற்பனை செய்வதற்கு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை பல்பொருள் அங்காடிகள் மற்றும் சதொச நிலையங்களுக்கு விநியோகிப்படுவதனால் இரண்டு கட்டுப்பாட்டு விலை வகைகள் அவசியமில்லை. இதன் காரணமாக ஒரு வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வெள்ளை முட்டை கிலோ ஒன்றின் அதிகபட்ச விலை 880 ரூபாவாகவும், சிவப்பு முட்டை கிலோ ஒன்றுக்கு 920 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலை நுகர்வோர் அதிகாரசபை வெளியிட்டிருந்தது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜுலை - 25 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம் - ஆடி 09
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : அஷ்டமி




**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். அமோகமான நாள்.

**இடபம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். ச நினைத்ததை முடிப்பீர்கள். புதியபாதை தெரியும் நாள்.

**மிதுனம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். வியாபாரத்தில் கமிஷன் புரோக்கரேஜ் வகைகளால் லாபம் உண்டு. சக ஊழியர்களால் நிம்மதி உண்டு. உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**
புதிய முயற்சிகள் வெற்றி அடையும். அரசு காரியங்கள் வெற்றியடையும். வியாபாரத்தில் சந்தை நிலவரம் அறிந்து லாபம் சம்பாதிப்பீர்கள். உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும்.

**சிம்மம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். மேலதிகாரி ஆதரிப்பார். நன்மை நடக்கும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சோர்வு களைப்பு வந்து நீங்கும். வேலைச்சுமை அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதல் நேரம் வேலை பார்க்க வேண்டி வரும். விழிப்புணர்வு தேவைப்படும்.

**துலாம்**
எளிதாக முடிய வேண்டிய சில காரியங்களை கூடப் போராடி முடிக்க வேண்டி வரும்.வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். மோதல்கள் வேண்டாம். அதிகம் உழைக்க வேண்டும்.

**விருட்சிகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பெற்றோரின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். மதிப்புக்கூடும் நாள்.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உங்கள் கை ஓங்கும். முயற்சியில் வெற்றி பெறும் நாள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். வியாபாரத்தில் வசூல் மந்தமாக இருக்கும். மறதியால் பிரச்னை வந்து நீங்கும். தர்மசங்கடத்தை சமாளிக்க வேண்டும்.

**மீனம்**
மறைந்து கிடந்த திறமை களை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதர வகையில் அனுகூலம் உண்டு. அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

# நீதிமன்றில் அம்பேத்கர் படத்தை நீக்குவதற்கு கட்சிகள் கண்டனம்!

*சென்னை, ஜுலை 25*

நீதிமன்றங்களில் அம்பேத்கர் படங்களை நீக்க கூடாது. இதுதொடர்பாக உயர் நீதிமன்ற பதிவாளர் அனுப்பிய சுற்றறிக்கையை திரும்பப்பெற வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ், நாம் தமிழர் சீமான், தமிழக காங்கிரஸ் துறை தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார்ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

‘தமிழகத்தில் உள்ள நீதிமன்றங்களில் காந்தி, திருவள்ளுவர் தவிர்த்து வேறு எந்த தலைவர்களின் சிலைகள், படங்களையும் வைக்கக்கூடாது’ என்று அனைத்து நீதிமன்றங்களுக்கும் சென்னை உயர் நீதிமன்ற பதிவாளர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

இந்தியாவில் நீதிமன்றங்கள் செயல்படுவதன் முதன்மை நோக்கமே அரசமைப்பு சட்டத்தை பாதுகாப்பதுதான். அதை உருவாக்கிய அம்பேத்கரின் சிலையோ, படமோ அங்கு இருப்பது எப்படி தவறாகும். எனவே, நீதிமன்ற வளாகங்களில் காந்தி, திருவள்ளுவருடன் அம்பேத்கரின் சிலைகள், படங்களையும் அமைக்க உயர் நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும் - என்று ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

”இந்த நாட்டின் நீதிமன்றங்களில் இடம்பெற அண்ணல் அம்பேத்கரை விடவும் வேறு யாருக்கு தகுதி உள்ளது? சட்ட மேதை அம்பேத்கரின் படத்தை நீதிமன்றத்திலிருந்து அகற்ற வேண்டும் என்பதற்கான திட்டமிட்ட சதியாகவே சென்னை உயர் நீதிமன்ற பதிவரின் இந்த அறிவிப்புத் தோன்றுகிறது” என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

நீதிமன்றங்களில் காந்தி, திருவள்ளுவர் தவிர்த்து, மற்ற தலைவர்களின் படங்களை நீக்க வேண்டும் என்று உயர் நீதிமன்ற பதிவாளர் சுற்றறிக்கை அனுப்பியிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

இன்றைய இந்தியாவில் அனைத்து மக்களின் உரிமைகளையும் சட்ட ரீதியாகப் பாதுகாக்கும் கவசமாக அரசமைப்பு சட்டம் திகழ்கிறது. அதை உருவாக்கிய அம்பேத்கரின் படத்தை நீதிமன்றங்களில் வைக்கக் கூடாது என்று கூறுவதை ஏற்க முடியாது - என்று எம்.பி. ரஞ்சன் குமார் தெரிவித்துள்ளார். (ஐ)

# தமிழ்நாடு அரசை கண்டித்து 25,000 இடங்களில் ஆர்ப்பாட்டம்

## பா. ஜ. கட்சி முன்னெடுத்தது

*சென்னை, ஜுலை 25*

தமிழ்நாடு அரசைக் கண்டித்து தமிழகத்தில் 25 ஆயிரம் இடங்களில் பா. ஜ. கவினர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மின் கட்டணம், சொத்து வரி, வாகனப் பதிவுக் கட்டணம்,விலைவாசி உயர்வு, அனைத்து பெண்களுக்கும் உரிமைத் தொகை வழங்க மறுப்பது, மேகேதாட்டு அணை கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசுக்கு எதிராக குரல் கொடுக்கத் தவறியது உள்ளிட்டவற்றுக்காக தி. மு. க. அரசை கண்டித்து, ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை சோழிங்கநல்லூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், மாநிலத் தலைவர் அண்ணாமலை பங்கேற்றார். அவர் பேசுகையில்,

தமிழகத்தில் உள்ள 11,000 தொகுதிகள், 15,600 கிராம ஊராட்சிகளில் தி. மு. க. அரசைக் கண்டித்தும், 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

தி. மு. க. ஆட்சிக்கு வந்து 27 மாதங்களாகியும், மக்களுக்கு இதுவரை எந்த நன்மையும் செய்யவில்லை. கர்நாடக அரசு மேகதாது அணை



கட்டியே தீருவோம் என்று கூறியபிறகும், தி. மு. கவினர் அதை எதிர்த்து குரல் கொடுக்கவில்லை. மகளிர் உரிமைத் தொகைக்கு இப்போதுதான் விண்ணப்பங்கள் விநியோகப்படுகின்றன. தி. மு. க.ஆட்சிக்கு வந்து 27 மாதங்கள் ஆகியுள்ளன. இதனால், பெண்கள் அனைவருக்கும் ரூ. 27 ஆயிரம் மகளிர் உரிமைத் தொகை வழங்க வேண்டும் - என்றார்.

# மக்களவைத் தேர்தலில் தி. மு. க. வெற்றிக்கு கடுமையாக பாடுபடுக

## தி. மு. கவினருக்கு முதல்வர் கடிதம்

*சென்னை, ஜுலை 25*

வரும் மக்களவைத் தேர்தலில் தி. மு. க. வெற்றிக்கு கடுமையாகப் பாடுபட வேண்டும் என்று தொண்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் முதல்வரும், தி. மு. க. தலைவருமான மு. க. ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

தி. மு. க. தமிழகத்தை 6 ஆவது முறையாக ஆளும் இயக்கமாக மட்டுமின்றி, இந்திய வரலாற்றின் முக்கிய காலகட்டத்தில் தவிர்க்க முடியாத இயக்கமாகவும் செயலாற்றி வருகிறது.

நாட்டின் பன்முகத் தன்மையை சிதைத்து, ஜனநாயகத்தை வேரறுக்கும் சூழல் நிலவுகிறது. அவற்றை எதிர்கொண்டு, ஜனநாயகத்தை மீட்பதில் தி. மு. க. முனைப்புடன் செயல்படுகிறது.

விரைவில் மக்களவை தேர்தல் வரவுள்ள நிலையில், தமிழகம், புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளிலும் தி. மு. க. தலைமையிலான கூட்டணி மாபெரும் வெற்றி பெறுவதற்கான பணிகளை முன்னெடுத்து வருகிறோம்.

கடந்த 10 ஆண்டு அ. தி. மு. க. ஆட்சியில், தி. மு. க. ஆதரவு வாக்காளர்கள் பலரின் பெயர்கள் நீக்கப்பட்டு, போலி வாக்காளர்கள் அதிகளவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய சமூக ஊடகங்களை பயன்படுத்தி, கட்சியினர் நடமாடும் ஊடகமாக மாற வேண்டும். மக்கள் பிரச்னைகளையும், தேவைகளையும் அறிந்தவர்கள் நீங்கள்தான். இந்தப் பயிற்சிக் கூட்டத்தின் நிறைவாக பொதுச் செயலாளர் தலைமை உரையாற்றுகிறார். நான் சிறப்புரை ஆற்றுகிறேன். கூட்டத்தில் பங்கேற்பதுடன் உங்கள் பணி முடிவதில்லை. உங்கள் வாக்குச் சாவடிக்கு உட்பட்ட தெருக்களில் பிரசாரம் மேற்கொண்டு, அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பொறுப்பும் உங்களுக்கு உள்ளது.

இந்தியாவின் வெற்றி நம் கையில் என்பதால், அவதூறுகளைப் பரப்பவும், நெருக்கடிகளை உருவாக்கவும் அரசியல் எதிரிகள் தொடர்ந்து செயல்படுவர். ஆனால், சவால்களை வென்று, சாதனை படைத்திடும் ஆற்றல் கட்சியினருக்கு உண்டு - என்று கூறியுள்ளார். (ஐ)

# நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தவறான நிர்வாகமே முழுக் காரணம்!

## சுட்டிக்காட்டுகின்றது உலக வங்கி



**கொழும்பு, ஜூலை 25**
**இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி இயற்கையாக ஏற்பட்ட நெருக்கடியல்ல, தவறான நிர்வாகத்தின் விளைவாகும் என நேபாளம், மாலைதீவுகள் மற்றும் இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர் பாரிஸ் ஹடாட் சர்வோஸ் தெரிவித்துள்ளார்.**

இது மனிதனால் உருவாக்கப்பட்ட நெருக்கடி என்றும் இதன் காரணமாக வெளிநாட்டுக் கடன் பாரியளவில் குவிந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2021 மற்றும் 2022 க்கு இடையில் இலங்கையில் வறுமை 13.1 வீதத்தில் இருந்து 25 வீதமாக இரட்டிப்பாகியுள்ளது என்றும் இந்த வருட இறுதிக்குள் வறுமை மேலும் 2.4 வீதத்தால் அதிகரிக்கும் என்றும் பாரிஸ் ஹடாட் சர்வோஸ் கூறினார்.

மேலும் பலர் வறுமையின் அதிர்ச்சியை உணரும் நாள் வெகு தொலைவில் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

# நோர்வூட்டில் சிசு சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜூலை 25
நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வென்ஞ்சர் தோட்ட தொழிற்சாலைக்கு அருகிலுள்ள பாலத்துக்கு அடியிலிருந்து பொலித்தீன் பையில் சுற்றப்பட்ட நிலையில் சிசுவொன்றின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள நபரொருவர் நோர்வூட் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்தே சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கெசல்கமுவ ஓயாவுடன் இணையும் ஆற்றிலேயே பொலித்தீன் பையில் சுற்றப்பட்ட நிலையில் சிசு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பின் மேலதிக விடயங்களை அறிவதற்கு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இந்தியா இங்கு காலூன்றுவதற்கு எவருமே கை உயர்த்தக்கூடாது!

## கூறுகிறார் சரத் வீரசேகர




கொழும்பு, ஜூலை 25
இந்திய நாடு இலங்கையில் காலூன்ற பாராளுமன்றத்தில் பிரதிநிதிகளாக இருக்கும் எவரும் கை உயர்த்தக்கூடாது எனவும் அது நாட்டின் பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாகும் எனவும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்தியப் பயணத்தின்போது இலங்கையையும் இந்தியாவையும் நில ரீதியாக இணைப்பது தொடர்பான சாத்தியப்பாட்டு ஆய்வுக்கு இணக்கம் காணப்பட்டது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே சரத் வீரசேகர இவ்வாறு குறிப்பிட்டார்.

“முன்னாள் கடற்படைத் தளபதி என்ற ரீதியிலும் மக்களின் பிரதிநிதி என்ற ரீதியிலும் இந்தக் கருத்தை அரசிடம் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தியா காலூன்றினால் வடக்கு -கிழக்கு மாகாணங்கள் இலங்கையில் இருந்து துண்டாடப்படும். இதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் இடமளிக்கக்கூடாது. அது தேசிய பாதுகாப்புக்கு மிகவும் அச்சுறுத்தலானது” என சரத் வீரசேகர மேலும் கூறினார். (அ)












தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் அமரர் முருகேசு சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு விழா அண்மையில் வடமராட்சி கரவெட்டியில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக கலந்துகொண்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு சிவசிதம்பரத்தின் குடும்பத்தினர் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரியை கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் உபாலி பொன்னம்பலமும் ஓய்வுபெற்ற அதிபர் இ. இராகவனும் கௌரவிப்பதையும், சிவசிதம்பரத்தின் மகள் கலாநிதி நிராஞ்சலி தேவராஜ், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் வீ.ரி. தமிழ்மாறன், யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் கு. மிகுந்தன் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (அ)

# சினோபெக் எரிபொருள் கப்பல்கள் அடுத்த மாதம் இலங்கைக்கு வரும்

கொழும்பு, ஜூலை 25
சீனாவின் சினொபெக் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி, அடுத்த மாதம் முதல் வாரத்தில் முதலாவது எரிபொருள் கப்பல் எமது நாட்டை வந்தடையும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக தெரிவித்தார்.

அனைத்து நிறுவனங்களுக்கும் பொதுவான வகையில் விலை சூத்திரத்தைப் பயன்படுத்தி எரிபொருளுக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர், நாட்டுக்கு நன்மை கிடைக்கும் வகையில் போட்டித்தன்மை கொண்ட எரிபொருள் விநியோகத்தை உருவாக்குவதே இதன் பிரதான நோக்கமாகும் என்றும் தெரவித்தார்.

அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னர் எதிர்காலத்தில் கியூ.ஆர் குறியீடு தொடர்பான முடிவு எடுக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது அதிக பிரச்சினைகளை எதிர்கொண்ட அமைச்சுக்களில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு பிரதானமானது. அன்று நீண்ட எரிபொருள் வரிசை இருந்தது. அந்த கடினமான காலத்தை கடந்து வந்திருக்கிறோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்ற பின்னர், எரிபொருள் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான சவாலை அமைச்சர் காஞ்சன விஜேசேகர பொறுப்பேற்றார்.

அந்த சமயம் நாட்டில் டொலர்கள் இருக்கவில்லை. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்யப்பட்ட 28 எரிபொருள் விநியோகஸ்தர்களில் இருவர் மாத்திரமே இலங்கைக்கு எண்ணெய் வழங்க முன்வந்திருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சரியான பொருளாதாரக் கொள்கையினால் நாட்டின் டொலர் கையிருப்பு வழமைக்கு திரும்ப ஆரம்பித்தது. மறுபுறம், அமைச்சர் காஞ்சனாவின் நிர்வாகக் கொள்கையின் அடிப்படையில், கியூ.ஆர் குறியீட்டின் ஊடாக, நாட்டில் கிடைக்கும் டொலர்களுக்கு ஏற்ப எரிபொருளை விநியோகிக்கப்பட்டது. கியூ.ஆர் குறியீடு அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பிறகு, எரிபொருள் வரிசைகள் முடிவடைய ஆரம்பித்தது. QR குறியீடு மூலம் எரிபொருள் வழங்குவதற்கான ஒதுக்கீடு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது.

தொடர்ச்சியான எரிபொருள் விநியோகம், போட்டித்தன்மையை அதிகரித்தல் உட்பட நான்கு முக்கிய பொறுப்புகளை அமைச்சர் காஞ்சன என்னிடம் ஒப்படைத்திருந்தார். நிரந்தரமான எண்ணெய் விநியோகத்திற்காக, குறுகிய காலத்திற்கு பதிலாக ஒரு வருட காலத்திற்கு எரிபொருள் கொள்முதல் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. முன்பு எரிபொருளுக்கு கேள்விமனு கோரப்பட்ட போது களஞ்சிய வசதிக்கு ஏற்ப எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டது. பாரம்பரிய முறைக்குப் பதிலாக, உலகிலேயே மிகக் குறைந்த விலையில் எரிபொருள் கிடைக்கும் நாட்களில் கேள்வி மனு கோரப்பட்டு எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டது.

முன்னதாக, பாதுகாப்பு கையிருப்புகளை பராமரிக்க எந்த ஏற்பாடும் இருக்கவில்லை.



இதுவரை பெற்றோல், டீசல் உள்ளிட்ட 30,000 லீற்றர் எரிபொருளை கையிருப்பில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அன்றாடச் செலவுகளுக்குத் தேவைப்படும் டொலர்கள் தவிர, மேலும் 60 மில்லியன் டொலர்களை கையிருப்பாக வைத்திருக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். நம் நாட்டுக்கு வரும் எரிபொருள் கப்பல்களிலிருந்து எரிபொருள் தரையிறங்கும் திகதி குறித்து உறுதியாக தெரியவில்லை-என்றார். (அ)

# கறுப்பு ஜுலைக் கண்காட்சியை பார்வையிட்ட அமெரிக்க தூதுவர்





கொழும்பு, ஜுலை 25

கறுப்பு ஜுலையை குறிக்கும் விதத்தில் கொழும்பில் இடம் பெறும் புகைப்படக் கண்காட் சியொன்றை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங் பார்வையிட்டார்.

கறுப்பு ஜுலையின் 40ஆவது வருடத்தின்போது சந்திரகுப்த தேனுவர மற்றும் வளர்ந்துவ ரும் கலைஞர்களின் விசேட கண் காட்சியை நான் பார்வையிட் டேன் என ஜுலி சங் தெரிவித் துள்ளார்.

இந்த கலைப்படைப்புகள் கடந்த காலத்தின் காயங்களை யும் அனைத்து இலங்கையர்க ளுக்குமான நியாயமான எதிர் காலத்தையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்றன என அவர் தெரிவித்தார். (அ)



# சிறுவர் இல்லத்திலிருந்து மூன்று சிறுமிகள் மாயம்

கொழும்பு, ஜுலை 25

கம்பஹா பிரதேசத்திலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையமொன் றிலிருந்து மூன்று சிறுமிகள் தப்பிச் சென்றுள்ளனர் என்று கம்பஹா பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

சிறுமிகள் தப்பிச் சென்றமை தொடர்பில், சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் பாதுகாவலர் கம்பஹா பொலிஸில் முறைப் பாடு செய்துள்ளார்.

குறித்த சிறுமிகளின் விவரங் கள், கம்பஹா பொலிஸ் நிலை யத்தை அண்மித்துள்ள பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்கப்பட் டுள்ளன.

கம்பஹா தலைமையக பொலிஸ் அதிகாரிகள் குழு குறித்த சிறுமிகளை கண்டறி யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

# மூடப்படும் நோர்வே தூதரகம்

கொழும்பு, ஜுலை 25

முன்னர் அறிவித்ததன் பிரகா ரம் கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் எதிர்வரும் 31 ஆம் திகதியில் இருந்து நிரந்தரமாக மூடப்படும் அறிவிக்கப்பட் டது.

புதுடில்லியில் உள்ள நோர்வே தூதரகம் இலங்கை மற்றும் மாலைதீவுடனான இரு தரப்பு உறவுகளை கையாளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் உள்ள தனது பணிகளில் பல மாற்றங்களைச் செய்வதாகவும், கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் உட் பட ஐந்து வெளிநாட்டு தூதரங் களை மூடுவதாகவும் கடந்த ஆண்டு நோர்வே வெளிவிவகார அமைச்சு அறிவித்தது. (அ)

# கணினிக் கட்டமைப்பில் சிக்கல் கடவுச்சீட்டு விநியோகம் தாமதம்

கொழும்பு, ஜுலை 25

கணினிக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள சிக்கல்களால் ஒன்லைன் மூலம் பல விண்ணப் பங்கள் தேங்கியுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விரைவில் சிக்கல்களை நிவர்த்தி செய்து, கடவுச்சீட்டு விநியோகத்தை விரைவுபடுத்த திட்டமிட்டுள்ள தாக குடிவரவு மற்றும் குடிய கல்வு திணைக்களக் கட்டுப் பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார்.

ஒன்லைன் மூலம் விண்ணப்ப முறைமையின் மூலம் சுமார் 35 ஆயிரம் கடவுச்சீட்டு விண்ணப் பங்கள் பெறப்பட்ட போதிலும், இதுவரை 3,700 கடவுச்சீட்டு கள் மட்டுமே விநியோகிக்கப் பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களக் கட் டுப்பாட்டாளர் நாயகம் கூறி னார். (அ)

# பாரிய கூட்டணியில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில்!

கொழும்பு, ஜுலை 25

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தலைமையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் போட்டி யிடப் போவதாக ஐக்கிய தேசி யக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க அடுத்த ஜனாதிபதித் தேர் தலில் பாரிய கூட்டணியில் போட்டியிடுவார். இந்த கூட் டணி சிறிலங்கா சுதந்திர கட்சி, பொது ஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி போன்ற கட்சிகளில் இருந்தவர்களால் உருவாக்கப்படும். ஜனாதிபதி விக்கிரமசிங்க இந்த கட்சிகளை ஒன்றிணைக்க முயற்சி செய்கி றார்-என்றார். (அ)

# தமிழ்க் கட்சிகளின் கடிதத்தை மோடி சாதகமாக பரிசீலித்தார்!

## சித்தார்த்தன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜுலை 25

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ் மக்கள் கூட்டணியும் இணைந்து அனுப்பிய கடி தத்தை இந்திய பிரதமர் சாதகமாக பரிசீலித்துள்ளார். எமது கடிதத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள விடயங்களையே, இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார் என தெரி வித்துள்ளார் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக்கட்சித் தலைவரான த.சித்தார்த்தன்.**

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

தமிழ் மக்கள் மிக நீண்டகா லமாக சமஸ்டி அமைப்புக்கே வாக்களித்துள்ளனர். தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷை களை முழுமையாக அடைவதே எமது இறுதி இலக்கு. அதற்கு இந்தியாவின் அனுசரணை எமக்கு தேவையென்பதை கடி தத்தில் குறிப்பிட்டுள்ளோம்.

இந்த பயணத்தில் முதல்படி யாக, 13ஆவது திருத்தத்தை உடனடியாக- முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென இந்திய பிரதமருக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பும், தமிழ் மக்கள் கூட்டணியும் இணைந்து கடிதம் அனுப்பியிருந்தன.

எமது கடிதத்தில் உள்ளடக் கப்பட்டிருந்த விடயங்களை, இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான கலந் துரையாடலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தி கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றி, 13வது திருத்தத்தை முழுமை யாக அமுல்படுத்த வேண்டு மென நரேந்திர மோடி வலயு றுத்தியுள்ளார்.



எமது கடிதத்தை இந்திய பிரதமர் சாதகமாக பரிசீலித்துள் ளார்- என்றார். (அ)

# மருந்து கொள்வனவு, விநியோகம் குறித்து விசாரணைகளை ஆரம்பிக்கத் தீர்மானம்

கொழும்பு, ஜுலை 25

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மருந்துகளை கொள்வனவு செய்தமை மற்றும் விநியோகித்தமை தொடர்பில் விசேட விசாரணைகளை ஆரம் பிக்கக் கணக்காய்வாளர் நாய கம் திணைக்களம் தீர்மானித் துள்ளது.

தேசிய மருந்து ஒழுங்கு முறை அதிகாரசபை, மருத்துவ விநியோகப் பிரிவு உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களையும் இந்த விசாரணை உள்ளடக்கிய தாக இருக்கும் என கணக்காய் வாளர் நாயகம் டபிள்யூ.பி. சி.விக்ரமரத்ன தெரிவித்தார்.

அதன்படி, அடுத்த வாரத் துக்குள் பணிகளை தொடங்க எதிர்பார்ப்பதாக அவர் கூறினார்.

தரமற்ற மருந்து பாவனை தொடர்பான தகவல்கள் சமீப காலமாக பல்வேறு பகுதிகளில் இருந்து தொடர்ச்சியாக பதி வாகி வருகின்றன.

அத்துடன், போதைப்பொ ருள் கொள்வனவு மற்றும் விநி யோகத்தின் கணினி அமைப்பு தொடர்பில் கணக்காய்வாளர் திணைக்களம் ஏற்கனவே விசார ணைகளை ஆரம்பித்துள்ளது. விசாரணைகள் இறுதிக் கட் டத்தை எட்டியுள்ளதாக கணக் காய்வாளர் நாயகம் டபிள்யூ. பி.சி விக்ரமரத்ன தெரிவித்தார்.

இதன்படி, கூடிய விரைவில் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என கணக் காய்வாளர் நாயகம் டபிள்யூ. பி.சி.விக்ரமரத்ன மேலும் கூறி னார்.

இதேவேளை, சுகாதார செய லாளரினால் சுகாதார தொழிற் சங்கங்களை ஒடுக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக் கையை இரத்துச் செய்யவேண் டும் என சுகாதார வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# மரக்கறி விதை இறக்குமதி 2030 இற்குள் நிறுத்தப்படும்

கொழும்பு, ஜுலை 25

2030 ஆம் ஆண்டுக்குள் நாட்டில் மரக்கறி விதைகள் இறக்குமதியை 100 வீதத்தால் நிறுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள் ளது.

இலங்கையில் பயிர்ச்செய் கைக்கு தேவையான மரக்கறி விதைகளின் உள்ளூர் உற்பத் தியை அதிகரிக்கும் வேலைத் திட்டத்தை விவசாயத் திணைக் களம் ஆரம்பித்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் பயிர்ச்செய் கைக்குத் தேவையான மரக்கறி விதைகள் அதிகளவில் இறக்கு மதி செய்யப்படுவதால், இறக்கு மதி செய்யப்படும் விதைக ளுக்கு விவசாயிகள் அதிக விலை கொடுக்கவேண்டியுள்ளது.

இதன் காரணமாக மரக்கறிச் செய்கையின் மூலம் போதிய வருமானத்தைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த விடயத்தை கருத்திற் கொண்டு நாட்டின் பயிர்ச்செய் கைக்கு தேவையான மரக்கறி விதைகளின் உள்ளூர் உற்பத் தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றை தயா ரிக்குமாறு விவசாய அமைச்சர், திணைக்களத்துக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். (அ)



# சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் ரணிலுடன் பேச்சு

கொழும்பு ,ஜூலை 25

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழு உறுப்பினர் யுவான் ஜியாஜூன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது, பொருளாதார அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாய்ப்புகளுக்காக ஆசியாவுடனான தொடர்பை வெளிப்படுத்திய தோடு எதிர்கால அபிவிருத்தி திட்டங்களையும் ஜனாதிபதி முன்வைத்தார். (அ)

# ஏழு வயதுச் சிறுமியை கடத்தி செல்ல முயற்சி

## மடக்கி பிடித்த பொலிஸார் காலிமுகத்திடலில் சம்பவம்

கொழும்பு ,ஜூலை 25

கொழும்பு காலிமுகத்திடல் கடற்கரைக்கு தாய் மற்றும் தந்தையுடன் வந்த ஏழு வயதுச் சிறுமியை கடத்திக்கொண்டு தப்பிச் செல்ல முயன்றதாக கூறப்படும் நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தங்கள் மகளை ஒருவர் கடத்திக்கொண்டு ஓட முயன்ற போது சிறுமியின் பெற்றோர் உதவி கேட்டு அலறியடித்ததாக பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் உடப்புசல்லாவ பிரதேசத்தை சேர்ந்த 33 வயது டையவர் என பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# 20 குடும்பங்களை குடியேற்ற கோரி 4 பேர் உணவு தவிர்ப்புப் போராட்டம்!

## கைவேலிப் பகுதியில் நேற்று ஆரம்பம்

முல்லைத்தீவு, ஜூலை 25

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில் நேற்று நால்வர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியின் ஓரத்தில் கைவேலிப் பகுதியில் தகர கொட்டகை ஒன்றை அமைத்து அவர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். "நாங்கள் வாழ்ந்த இடத்தில் எங்களை மீளக் குடியேற்றுங்கள்" என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் இடம்பெறுகிறது.

இவ் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ரவிச்சந்திரன் உதயச்சந்திரன் மூன்று அங்கத்தவர்களை கொண்ட குடும்பத் தலைவர்,யோகேஸ்வரன் மயூரன் மூன்று அங்கத்தவர்களை கொண்ட குடும்பத் தலைவர்,கணபதி கதிர்க்கீரன் எட்டு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தின் அங்கத்தவர்,கோவிந்தன் பிரசாந்தன் மூன்று அங்கத்தவர்களை கொண்ட குடும்பத் தலைவர்ஆகியோர் தங்கள் 20 குடும்பங்களை விரைவில் குடியேற்றுமாறு கோரி இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கைவேலி பகுதியில் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப்புலிகள் அமைப்பின் 45 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டு குறித்த பகுதியில் 45 குடும்பங்கள் குடியேறி இருந்தனர்.இந்நிலையில் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்தபோது குறித்த பகுதியை விட்டு மக்கள் சென்ற பின்னர் குறித்த பகுதியில் இருந்த குடும்பங்கள் மீள்குடியேற்றம் வரவில்லை பலர் உயிரிழந்தும் வேறு சிலர் வேறு இடங்களில் குடியேறிவிட்டனர்.

இவ்வாறான நிலையில் குறித்த கிராம மக்கள் 2012 ஆம் ஆண்டு கைவேலி பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போது குறித்த பகுதியை வனவள திணைக்களம் எல்லைக் கற்கள் இட்டு வனப் பகுதியாக்கி விட்டனர்

இவ்வாறான பின்னணியில் மக்கள் வாழ்ந்த வீடுகள், கட்டுக் கிணறுகள், கட்டடங்கள், பயன்தரு மரங்கள் உள்ள கைவேலி பகுதியில் காணிகள் வீடுகள் அற்ற சுமார் 20 குடும்பங்கள் பலகாலமாக குடியேறி வாழ முயற்சித்து வந்த அங்கு சென்று கொட்டில்களை அமைத்து குடியேறியுள்ளனர்.

இந்நிலையில், அண்மையில் குறித்த பகுதிக்குச் சென்ற வனவள திணைக்கள அதிகாரிகள் அங்கு மக்கள் போட்ட கொட்டில்களை அகற்றி கொழுத்துவதற்காக மண்ணெண்ணையுடன் வருகை தந்ததாகவும் பெண்கள் தனிமையில் இருந்த கொட்டில்களில் சென்று முன்னாள் போராளியான பெண் ஒருவர் மீதும் ஆண் ஒருவர் மீதும் தாக்குதல் நடத்தியதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான பின்னணியில் தமது நிலத்தில் 20 குடும்பங்களை விரைவில் குடியேற்றுமாறு கோரி இப்போராட்டம் இடம்பெற்று வருகிறது. (அ)

# கொத்தலாவல பல்கலை வைத்தியசாலை இடிதாங்கிகளின் செப்பு தகடுகள் திருட்டு

கொழும்பு, ஜூலை 25

வெரஹெர, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலையின் 10 கட்டடங்களில் பொருத்தப்பட்டிருந்த இடிதாங்கியின் செப்புத் துண்டுகள் திருடப்பட்டுள்ளன.

6.5 மில்லியன் ரூபா பெறுமதியான செப்பு பட்டைகள் திருடப்பட்டுள்ளன.

வைத்தியசாலையின் சிரேஷ்ட மின் பொறியியலாளர் லெப்டினன்ட் கேணல் பி.கே. டி.கொடகந்த பொரலஸ்கமுவ பொலிஸில் கடந்த 22 ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளார்.

திருடப்பட்ட செப்பு பட்டைகளின் மதிப்பு சுமார் ரூ.6,597,000 என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 30 முதல் ஜூலை 3 வரை இந்த திருட்டு நடந்துள்ளது.

முதற்கட்ட விசாரணையில், இந்த வைத்தியசலை வளாகத்தில் வெளியாட்கள் நுழைந்து இதுபோன்ற திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட இடமில்லை என பொலிஸார் கண்டறிந்தனர். (அ)

# பணிப்புறக்கணிப்பினால் 11 அலுவலக ரயில்கள் ரத்து

கொழும்பு, ஜூலை 25

ரயில் எஞ்சின் சாரதிகளின் தொழிற்சங்க நடவடிக்கையின் காரணமாக ஒருசில அலுவலக ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டதாக ரயில்திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில் எஞ்சின் சாரதிகளினால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொழிற்சங்க நடவடிக்கையின் காரணமாகவே இவ்வாறு அலுவலக ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டதாக திணைக்களம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த தொழிற்சங்க நடவடிக்கையின் காரணமாக ஏனைய ரயில் போக்குவரத்திலும் காலதாமதம் ஏற்பட்டது.

இந்த தொழிற்சங்க நடவடிக்கையானது நேற்றுமுன்தினம் மாலை ஆரம்பிக்கப்பட்டது.

அதன் காரணமாக கொழும்பிலிருந்து தூர பிரதேசங்களுக்கு பயணிக்க இருந்த ஒரு சில ரயில்களும் நேற்று முன்தினம் மாலை இரத்து செய்யப்பட்டன. (அ)

# விதைகள் விற்பனை மூலம் ரூ.165 கோடி வருமானம்

கொழும்பு, ஜூலை 25

விதைகள் மற்றும் நடவுப் பொருட்களின் விற்பனை மூலம் கடந்த 2022ஆம் ஆண்டில் விவசாயத் திணைக்களம் 1.65 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது.

அதன்படி, விவசாயத் திணைக்களத்தினால் உற்பத்தி செய்யப்படும் விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கு விவசாயிகள் மத்தியில் அதிக கேள்வி காணப்படுவதாகவும் அதில் மிச்-1 மற்றும் மிச்-2 ஆகிய இரண்டு வகையான மிளகாய்கள் முதன்மையானவை எனவும் விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது, 19 வகை காய் கறிகளின் விதைகள் அரசு விதை உற்பத்திப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த பத்தாண்டுகளில் காய்கறி விதைகளின் ஆண்டு உற்பத்தி ஒரே சீராக 8,000-8,500 கிலோ கிராமாக காணப்பட்டுள்ளது.

2022 தொடக்கம் 2024 வரையான மூன்று ஆண்டுகளில் இந்தத் தொகையை மேலும் அதிகரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, அரசாங்க விதை உற்பத்தி பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கு விதையின் அடிப்படை அளவு 2007 தொடக்கம் 2009ஆம் ஆண்டுகளில் 330 மெட்ரிக் டன்களாக இருந்தது, மேலும் 2022 ஆம் ஆண்டில் இந்த அளவு 860 மெட்ரிக் டன்னைத் தாண்டியுள்ளது,

இது உருளைக்கிழங்கு விதை உற்பத்தியில் சுமார் 2.5 சதவீதம் அதிகரித்துள்ளது.

இலங்கையில் வருடாந்த உருளைக்கிழங்கு விதைகளின் தேவை 12500 மெற்றிக் தொன் எனவும், 2022 தொடக்கம் 2024 ஆம் ஆண்டளவில் 1000 மெற்றிக் தொன்களை விவசாயிகளிடமிருந்து நேரடியாக விவசாயத் திணைக்களம் எதிர்பார்க்கிறது எனவும் இது விதைத் தேவையின் 8 வீதம் எனவும் விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# ஸ்பெயின் பெண் கைது

கொழும்பு, ஜூலை 25

வெளிநாட்டு பெண்ணொருவர் ஓட்டிய கார் மற்றும் முச்சக்கர வண்டி என்பன நேருக்கு நேர் மோதியதில் முச்சக்கர வண்டியில் பயணித்த நான்கு பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி-நுவரெலியா வீதியில் கட்டுகிதுல பிரதேசத்தில் நேற்று முன் தினம் இரவு இந்த விபத்து நடந்துள்ளது.

முச்சக்கர வண்டியில் பயணித்த புஸ்ஸல்லாவ பீ.எஸ். கொலனி பிரதேசத்தில் வசித்து வரும் 7 மற்றும் 2 வயதான சிறுவர்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் காயமடைந்து கம்பளை மற்றும் பேராதனை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக புஸ்ஸல்லாவை பொலிஸார் தெரிவித்தனர்.

காரை ஓட்டிச் சென்ற ஸ்பெயின் நாட்டை சேர்ந்த பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ)

# நாமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 25

கவர்ஸ் கோப்ரேட் நிறுவனத்தில் 30 மில்லியன் ரூபாயை முதலீடு செய்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட சிலருக்கு எதிராக பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் தாக்கல் செய்த வழக்கை விசாரிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் முறைப்பாட்டின் சாட்சி விசாரணை நிறைவடைந்துள்ளதுடன், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 200ஆவது பிரிவின் கீழ் பிரதிவாதி சாட்சி விசாரணையின்றி பிரதிவாதிகளை விடுவிக்குமாறு கோரிக்கை விடுப்பதாக இதற்கு முன்னர் பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளால் மன்றுக்கு அறிவிக்கப்பட்டிருந்து.

அதற்கமைய, குறித்த வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உத்தரவிட்ட மேல் நீதிமன்ற நீதிபதி, அன்றைய தினம் இந்தக் கோரிக்கை தொடர்பான சமர்ப்பணங்களை முன்வைக்குமாறு உத்தரவிட்டார். (அ)

# மணிப்பூர் வன்முறையின் தொடக்கப்புள்ளி எது? அங்கு என்ன நடக்கிறது?

கிரேமி பேக்கர்

இந்தியாவின் மணிப்பூர் பற்றி எரிந்துகொண்டிருக்கிறது. இரண்டு குகி இன பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு ஊர்வலமாக இழுத்துச் செல்லப்பட்ட கொடூரம் முழு இந்திய நாட்டையே உலுக்கியுள்ளது.

மணிப்பூர் இப்போது இரண்டு துண்டுகளாகிவிட்டதைப் போல் காட்சியளிக்கிறது. ஒரு பகுதி மெய்தேய் சமூக மக்களிடமும் மற்றொரு பகுதி குகி சமூகத்தினரிடமும் உள்ளது.

கண்ணுக்குத் தென்படும் காட்சிகள், இந்த வன்முறை வாரக்கணக்கில் நீடித்துக் கொண்டிருப்பதைக் காட்டுகின்றன. வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன, மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

மெய்தேய், குகி, நாகா இன மக்கள் பழைய பிரச்னைகளை மறந்து மீண்டும் ஒற்றுமையாக வாழ முடியும் என்ற கனவும் இந்த வன்முறைத் தீயில் கருகிக் கொண்டிருக்கிறது.

கடந்த ஒன்றரை மாதங்களில் சாதிச் சண்டையாக உருவெடுத்த இந்த வன்முறை இனக் கலவரமாக மாறிவிட்டது. இந்தியாவில் உள்ள ஒரு சிறிய மாநிலத்தின் வன்முறையை கிட்டத்தட்ட உள்நாட்டுப் போரின் நிலை என்று பலரும் வர்ணிக்கும் அளவுக்கு நிலைமை மோசமானது.

பெரும்பான்மையான மெய்தேய் மற்றும் சிறுபான்மை குகி சமூக மக்களுக்கு இடையே நிலம், செல்வாக்கு ஆகியவற்றுக்கான மோதல் கலவரமாக மாறி பூதாகரமாக வளர்ந்துள்ளது.

இந்தப் பகுதியில் பெண்களுக்கு எதிரான சமீபத்திய கொடூர பாலியல் துன்புறுத்தல் நாட்டையே உலுக்கியது. மே மாதத்தில் இரண்டு குகி இன பெண்கள், அவர்களது கிராமம் அழிக்கப்பட்ட பிறகு மெய்தேய் சமூக ஆண்களால் நிர்வாணமாக்கப்பட்டு ஊர்வலமாக இழுத்துச் செல்லப்பட்ட கொடூரத்தின் வீடியோ சமீபத்தில் வெளியானது.




### மணிப்பூரில் யார் வாழ்கிறார்கள்?

மலைகள் நிறைந்த வடகிழக்கு மாநிலமான மணிப்பூர், வங்கதேசத்திற்கு கிழக்கே அமைந்துள்ளது. அதன் மக்கள்தொகை 33 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அதில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் மெய்தேய் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். சிறுபான்மை பழங்குடி சமூகங்களான குகி, நாகா ஆகிய சமூகங்களைச் சேர்ந்த மக்கள் 43 வீதத்தினர் வாழ்கின்றனர்.

மே மாத தொடக்கத்தில் ஆரம்பித்த கலவரத்தில் இதுவரை குறைந்தது 130 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

சுமார் 400 பேர் காயமடைந்துள்ளனர். கலவரத்தை அடக்க ராணுவம், துணை ராணுவப் படைகள், காவல் துறை ஆகியவை போராடி வருகின்றன. அங்கு நடந்து கொண்டிருக்கும் கலவரத்தால் 60,000க்கும் மேற்பட்டோர் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

காவல்துறையின் ஆயுத குடோன்கள் சூறையாடப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான தேவாலயங்கள், ஒரு டஜனுக்கும் அதிகமான கோவில்கள் அழிக்கப்பட்டன. கிராமங்கள் தீக்கிறையாக்கப்பட்டன.

### மணிப்பூர் கலவரம் எப்படித் தொடங்கியது?

மெய்தேய் சமூகத்தினருக்கு அதிகாரப்பூர்வ பழங்குடி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு குகி இன மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அதைத் தொடர்ந்து மணிப்பூரில் பதற்றம் ஏற்பட்டது.

இந்த அந்தஸ்து வழங்கப்பட்டால், அரசாங்கத்தில் அந்தச் சமூகத்திற்கு ஏற்கெனவே இருக்கும் செல்வாக்கு மேலும் வலுப்படும் என்று குகி மக்கள் வாதிட்டனர்.

ஆனால், இந்தக் கலவரத்திற்கான அடிப்படையாக எண்ணற்ற காரணங்கள் உள்ளன. மெய்தேய் தலைமையிலான அரசாங்கம் போதைப்பொருட்களுக்கு எதிரான போர் எனக் கூறி மேற்கொள்ளும் நடவடிக்கைகள், தங்கள் சமூகத்தை வேரோடு பிடுங்குவதற்கான ஒரு திரைமறைவுச் செயலே என்று குகி மக்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

மியான்மரில் இருந்து வருவோரின் சட்டவிரோத குடியேற்றம் பதற்றத்தை அதிகரித்துள்ளது. அதிகமாகி





வரும் மக்கள்தொகையால் நிலப் பயன்பாட்டின்மீது அழுத்தம் ஏற்பட்டுள்ளது. வேலையின்மை இளைஞர்களைப் பல்வேறு போராளிக் குழுக்களை நோக்கித் தள்ளியுள்ளது.

### மணிப்பூர் கலவரத்தில் சண்டையிட்டுக் கொள்பவர்கள் யார்?

மெய்தேய், குகி, நாகா ஆகிய சமூகங்களின் போராளிகள், பல தசாப்தங்களாக முரண்பட்ட 'தாய்நாடு கோரிக்கைகள்', மத வேறுபாடுகள் தொடர்பாக ஒருவருக்கொருவர் சண்டையிட்டு வருகின்றனர்.

மேலும் அனைத்து தரப்பினரும் இந்தியாவின் பாதுகாப்புப் படைகளுடனும் மோதி வருகின்றனர். இது ஒரு புறம் இருந்தாலும், தற்போது வெடித்துள்ள கலவரம் கிட்டத்தட்ட முற்றிலும் மெய்தேய் மற்றும் குகி மக்களுக்கு இடையிலானதாக உள்ளது.

"இப்போது நடக்கும் இந்த மோதல் முற்றிலுமாக இனரீதியான மோதலாக வேரூன்றியுள்ளது. இது மதத்தால் நடப்பதல்ல," என்கிறார் தி ஃப்ரான்டியர் பத்திரிகையின் மணிப்பூர் ஆசிரியர் திரன் ஏ சடோக்பம்.

### யார் இந்த குகி மற்றும் மெய்தேய் மக்கள்?

மெய்தேய் மக்கள், மணிப்பூர், மியான்மர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளைப் பூர்வீகமாகக் கொண்டுள்ளார்கள்.

பெரும்பான்மையானவர்கள் இந்துக்கள் என்றாலும் சிலர் சனமாஹி மதத்தைப் பின்பற்றுகிறார்கள்.

குகி சமூக மக்கள், பெரும்பாலும் கிறிஸ்தவர்கள். இவர்கள் இந்தியாவின் வடகிழக்குப் பகுதி முழுவதும் பரவி வாழ்கின்றனர். மணிப்பூரில் உள்ளவர்களில் பலர் தங்கள் பூர்வீகத்தை மியான்மர் வரை கொண்டுள்ளனர்.

மெய்தேய் மக்கள் பெரும்பாலும் இம்பால் பள்ளத்தாக்கில் வாழ்கின்றனர். குகி மக்கள் அதைச் சுற்றியுள்ள மலைகளிலும் அதற்கு அப்பாலும் வாழ்கின்றனர்.

### பெண்கள் தாக்கப்படுவதும் அவமானப்படுத்தப்படுவதும் ஏன்?

டெல்லியில் உள்ள பிபிசி செய்தியாளர் கீதா பாண்டே, "பாலியல் வல்லுறவு, வன்கொடுமைகள் ஆகியவை கலவரத்தின்போது வன்முறையின் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுவதற்கான சமீபத்திய சான்றாக மணிப்பூரில் பெண்களுக்கு நேர்ந்த கொடூரத்தின் வீடியோ உள்ளது. இது பெரும்பாலும் பழிவாங்கும் தாக்குதல்களின் ஒரு சுழற்சியாக மேலும் மோசமடையக்கூடும்," என்று கூறுகிறார்.

உள்ளூர் ஊடக செய்திகளின்படி, மே மாதம் நடந்த இந்தத் தாக்குதல், குகி போராளிகளால் மெய்தேய் பெண் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டதாக வெளியான போலிச் செய்தியைத் தொடர்ந்து, அதற்கான பழிவாங்கும் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டது.

இது "குகி பழங்குடிப் பெண்கள் மீது மெய்தேய் போராளிக் கும்பல்கள் பழிவாங்கும் விதத்தில் மேற்கொள்ளும் வன்முறையின் ஒரு புதிய, கொடிய சுழலை கட்டவிழ்த்துவிட்டதாக," தி பிரின்ட் குறிப்பிட்டுள்ளது.

### மத்திய அரசு என்ன செய்துகொண்டிருக்கிறது?

மே 4ஆம் தேதியன்று மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலின் வீடியோ வெளியாகும் வரை மணிப்பூரில் நடந்த வன்முறை குறித்து பிரதமர் நரேந்திர மோதி எதுவும் பேசாமல் அமைதியாகவே இருந்தார்.

வீடியோ வெளியான பிறகு பேசிய அவர், இந்தச் சம்பவம் "இந்தியாவை அவமானத்தியது" என்றும் "இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தப்பிக்க மாட்டார்கள், மணிப்பூர் மக்களுக்கு நடந்ததை மன்னிக்கவே முடியாது" என்றும் கூறினார்.



ஆனால், மணிப்பூர் குறித்து அவர் பகிரங்கமாக கருத்து தெரிவிக்க ஏன் இவ்வளவு காலம் ஆனது என்று மக்கள் பலரும் கேட்கின்றனர்.

இந்தக் கலவரத்தைத் தடுக்கும் முயற்சியில் இந்திய அரசு சமீபத்தில் 40,000 ராணுவ வீரர்கள், துணை ராணுவப் படையினர், காவல்துறையினரை அப்பகுதிக்கு அனுப்பியுள்ளது. இதுவரை, நேரடியாக குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வருமாறு பழங்குடித் தலைவர்கள் முன்வைக்கும் கோரிக்கையை மத்திய அரசு ஏற்கவில்லை.

இதற்கிடையே, வன்முறை தொடர்ந்து பரவிக் கொண்டிருப்பது, மேலும் பல கிராம மக்களைத் தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறும் நிலைக்குத் தள்ளுகிறது.

### மணிப்பூரில் யார் ஆட்சி நடக்கிறது?

பிரதமர் நரேந்திர மோதியின் பாரதிய ஜனதா கட்சிதான் மணிப்பூரில் ஆளும் கட்சியாக உள்ளது. மெய்தேய் சமூகத்தைச் சேர்ந்த என்.பிரேன் சிங் தலைமையிலான அரசு அங்கு ஆட்சி செய்கிறது.

மொத்த மக்கள்தொகையில் 53 வீதம் இருக்கும் மெய்தேய் சமூகம், சட்டப்பேரவையின் 60 இடங்களில் 40 இடங்களை வைத்துள்ளது.

ஹெராயின் வர்த்தகத்திற்காக கசகசா பயிரிடுவதற்கு எதிரான பிரேன் சிங்கின் சமீபத்திய நடவடிக்கைகள் குகி மக்களின் பகுதிகளைக் குறி வைத்து நடப்பதாக குகி சமூகத்தினர் குற்றம் சாட்டுகின்றனர்.

குகி கிளர்ச்சிக் குழுக்கள் சமூக மக்களைத் தூண்டிவிடுவதாக அவரது அரசு குற்றம் சாட்டியது.

●

# இலங்கையில் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு எப்போது? ரணில் பயணத்தால் அதானிக்கு மட்டும்தான் லாபமா?

ரஞ்சன் அருண் பிரசாத்

இலங்கை மற்றும் இந்திய நாட்டு தலைவர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளின் போது, பல்வேறு முக்கிய திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டிருந்தன.

ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பதவியேற்றதன் பின்னர், இந்தியாவிற்கான விஜயத்தை கடந்த வாரம் மேற்கொண்டிருந்தார்.

ரணில் விக்ரமசிங்க தனது இந்திய விஜயத்தின் போது, இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இந்திய குடியரசு தலைவர் திரௌபதி முர்முவை, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார்.

ரணில் விக்ரமசிங்கவின் இந்த விஜயத்தின் போது, பல்வேறு திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டிருந்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டிருந்தது.

அத்துடன், அதானி குழுமத்தின் தலைவர் கௌத்தம் அதானியையும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார்.

### அதானி - ரணில் விக்ரமசிங்க சந்திப்பு

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையம், காற்றாலை மின் உற்பத்தி திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை இலங்கையில் அதானி குழுமம் முன்னெடுத்து வருகின்றது.

இந்த திட்டத்திற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ காலப் பகுதியில் கௌதம் அதானி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு, பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்ததுடன், அதானி குழுமத்தின் அதிகாரிகள் வடக்கு பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்கள்.

இந்த பின்னணியிலேயே, இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானியை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார்.

இந்திய - இலங்கை நாடுகளுக்கு இடையிலான படகு சேவைகளை ஆரம்பித்தல், விமான சேவைகளை துரிதப்படுத்தல், தமிழகத்திற்கும், இலங்கைக்கும் இடையிலான குழாய் மின்சக்தி இணைப்பு, இந்திய ரூபாவில் வணிகத்தை மேற்கொள்ளுதல், யுபிஐ முறையிலான பணப் பரிமாற்றம், இரு நாடுகளுக்கும் இடையிலா தரைவழி இணைப்பு போன்ற பல்வேறு திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

### தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு பற்றி பேச்சு

அதேபோன்று, இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து, பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பின் போது அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் வாழும் இந்திய வம்வாசளித் தமிழர்களின் மேம்பாட்டிற்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடி 3 ஆயிரம் மில்லியன் ரூபாயை வழங்கவுள்ளதாக இந்திய விஜயத்தின் இணைந்துக்கொண்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தில் மலையக மக்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் மலையகத்திற்கான பல்கலைக்கழகம் ஆகியன இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல்கள் வழமையான விடயங்களையே பிரதிபலிப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### ‘இலங்கை மீது ஆதிக்கம் செலுத்த இனப் பிரச்னை இந்தியாவுக்கு துருப்புச் சீட்டு’

இந்த விடயம் தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய சிரேஷ்ட பத்திரிகையாளர்களின் பார்வை எவ்வாறு அமைகின்றது என்பது குறித்து ஆராய்ந்தபோது,

இந்த விடயம் தொடர்பில் இலங்கையின் சிரேஷ்ட பத்திரிகையாளர் பாரதி ராஜநாயகம் கருத்து தெரிவித்தார்.

“இந்த விஜயமானது எதிர்பார்க்கப்பட்ட நற்பலன்கள்தான் வந்திருக்கின்றன. புதிதாக ஒன்றும் நடக்கவில்லை என்று தான் நினைக்கின்றேன். திரும்பவும் 13வது திருத்தத்தை பற்றியும், மாகாண சபை தேர்தல் நடக்க வேண்டும் என்பதை தான் மோடி சொல்லியிருக்கின்றார். ரணில் விக்ரமசிங்க, இந்திய செல்வதற்கு முன்னர் தமிழ் கட்சிகளை அழைத்து சந்திப்புகளை நடத்தியிருந்தார். அந்த பேச்சுவார்த்தையில் தன்னுடைய தீர்வு என்னவென்பதையும் அவர் சொல்லியிருக்கின்றார். தமிழர் பிரச்னையில் ஒரு நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கின்றேன் என்பதை காட்டுவதற்கு அதனை சந்தர்ப்பமாக பயன்படுத்தியிருக்கின்றார். இனப் பிரச்னையை பொருத்தவரை அதற்கு மேல் எந்தவொரு அழுத்தங்களோ நெருக்கடிகளோ அங்கு இருக்கவில்லை.

மோடியின் தேவைகள் என்ன, அவரின் எதிர்பார்ப்பு என்னவென்பதையும் ரணில் விக்ரமசிங்க நன்கு புரிந்துக் கொண்டிருக்கின்றார். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்தியாவின் மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு முற்பட்டுள்ள ஒரு தன்மை இருக்கின்றது. சீனா அதிகளவில் கால் பதிக்கின்றமையினால், அதற்கு எதிராக ஒரு தங்களுடைய ஆதிக்கம் இருக்க வேண்டும் என்பதை இந்தியா



விரும்புகின்றது. அந்த ஒப்பந்தங்களும், அங்கு நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளும் அதை ஓரளவுக்கு வெளிப்படுத்தியுள்ளன. வடக்கு, கிழக்கில் இந்தியா ஏதோ ஒரு வகையில் தன்னுடைய மேலாதிக்கத்தையோ அல்லது பிரசன்னத்தையோ காட்ட முற்படுகின்றது. மோடிக்கும் அது தான் தேவை என்பதை ரணில் விக்ரமசிங்க நன்கு உணர்ந்திருக்கின்றார்.

இனப் பிரச்னை என்பது ஒரு துருப்பு சீட்டு. அதாவது 13வது திருத்தத்தை ஒரு துருப்பு சீட்டாக தான் பயன்படுத்துகின்றார். பிராந்திய மற்றும் பொருளாதார ரீதியான எதிர்பார்ப்புகளை ஓரளவு பூர்த்தி செய்வதன் ஊடாக, இனப் பிரச்னை நெருக்கடியிலிருந்து ஓரளவுக்கு தன்னால் விடுப்பட முடியும் என ரணில் விக்ரமசிங்க கருதியிருக்கின்றார். 13வது திருத்தத்தையோ நடைமுறைப்படுத்துவதோ அல்லது மாகாண சபைத் தேர்தலை நடத்துவதோ ரணில் விக்ரமசிங்கவின் எண்ணம் கிடையாது.

### “ஜனாதிபதி தேர்தலை நடத்த ரணில் விருப்பம்”

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக முயற்சிக்கின்றார் என்றே தெரிகின்றது. இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளும் கதைத்துள்ளார். ஜனவரியில் தேர்தலை நோக்கி செல்வதாக தெரிகின்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அவர் எதுவும் செய்யமாட்டார்.

ஏனென்றால், சிங்கள மக்கள் மத்தியில் அது பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்துவதாக இருக்கும் என்பது அவருக்கு தெரியும். ஒரு காலத்தை கடத்துவதற்கு இதை பயன்படுத்திக் கொள்கின்றார். இந்தியாவை சமாளிப்பதற்கு இதை பயன்படுத்துகின்றார். இதனை ராஜதந்திர ரீதியாக ரணில் விக்ரமசிங்க பயன்படுத்திக் கொள்கின்றார் என நான் நினைக்கின்றேன்” என அவர் பதிலளித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும், இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான கூடுதலான பேச்சுவார்த்தைகள் மற்றும் ஒப்பந்தங்கள் தமிழகத்துடன் இணைந்ததாகவே இருந்தன. குறிப்பாக குழாய் மின்சக்தி, படகு போக்குவரத்து, விமான சேவைகள், இந்திய - இலங்கை தரைவழி போக்குவரத்து போன்றவை குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பில் உங்களின் பார்வை என்ன?

“இலங்கையின் வடக்கையும், தமிழகத்தையும் இணைத்து வைத்திருப்பதன் ஊடாக, வடக்கு மற்றும் கிழக்கில் தங்களுடைய பிரசன்னத்தை அதிகரிப்பதற்கான தன்மை இந்தியாவிற்கு இருக்கின்றது. அதற்காக ஓரளவு ரணில் விக்ரமசிங்கவும் இணங்கி போவதை போன்று தெரிகின்றது. பொருளாதார ரீதியாக கப்பல் போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்தை அதிகரிக்கும் போது வடக்கு கிழக்கு பகுதிகளிலும், நாடு முழுவதும் உல்லாச பயணிகள் அதிகரிப்பதற்கான சாத்தியம் இருக்கின்றது. வர்த்தக ரீதியான தொடர்புகள் அதிகரிக்கும். பொருளாதார ரீதியான தேவையொன்று இருக்கின்றது. அதுவும் ஒரு காரணம். இந்த காரணங்களினால் ரணில் விக்ரமசிங்க இணங்கி இருக்கலாம் என நான் நினைக்கின்றேன்.” என கூறினார்.

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையிலான போக்குவரத்து தொடர்பிலும் அவர், கருத்து வெளியிட்டார்.

“பாலம் அமைப்பது தொடர்பில் சரியாக கூற முடியாது. ஏனென்றால், அது உடனடியாக நடைபெறும் ஒன்றல்ல. கப்பல் போக்குவரத்து கூட இழுபறியில் நிற்கின்றது. நான்கு, ஐந்து மாதங்களுக்கு மேல் சொல்லப்பட்டாலும், அது இழுபறியில் உள்ளது. படகு சேவை தொடர்பில் காலத்திற்கு காலம் வெவ்வேறு கருத்துக்கள் வருகின்றன. இரு தரப்பினரும் சரியான தேதியை கூட குறிப்பிடவில்லை. விமான போக்குவரத்து மாத்திரம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. மதுரையிலிருந்து விமான போக்குவரத்து இடம்பெறும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த வகையில் அது ஓரளவு பயனுள்ளதாக இருக்கின்றது. பாலம் போடுவது உடனடியாக சாத்தியமாகுமா என்று எனக்கு தெரியவில்லை.” என அவர் கூறினார்.

ரணில் விக்ரமசிங்கவின் இந்திய விஜயத்தின் பின்னர், சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையில் எவ்வாறான தாக்கம் காணப்படும் என நாம் அவரிடம் வினவினோம்.

“வடக்கில் சீனாவின் பிரசன்னம் அதிகரிக்கின்றமை தொடர்பில் இந்தியா அழுத்தங்களை கொடுத்துக் கொண்டிருந்தது. சீனாவின் கடலட்டை பண்ணைகள், வெவ்வேறு திட்டங்களின் ஊடாக சீனா வடக்கில் கால் பதிப்பது இந்தியாவிற்கு நெருக்கடியை கொடுத்துக் கொண்டிருந்தது. அதனை முடிவுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை இந்தியா எடுத்துள்ளது என நினைக்கின்றேன். இனி சீனா வடக்கில் அதிகளவில் கால் பதிக்க முடியாது என நான் நினைக்கின்றேன்.” என கூறினார்.

### “அதிகாரப் பகிர்வு குறித்தும் இன்னும் பேசுவது வெட்கக்கேடானது”

இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயம் மற்றும் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் இந்தியாவின் சிரேஷ்ட பத்திரிகையாளர் ஆர்.கே.இராதாகிருஷ்ணன் கருத்து தெரிவித்தார்.

‘இந்த விஜயத்தை பாசிடிவாக நான் பார்க்கவில்லை. நாங்கள் பல காலமாக 13வது திருத்தச் சட்டத்தை பற்றி பேசிக் கொண்டிருக்கின்றோம். 13வது திருத்தச் சட்டம் இலங்கை அரசியலமைப்பு சட்டத்தில் ஏற்கனவே இருக்கின்றது. அதை நடைமுறைப்படுத்துங்கள் என ராஜீவ் காந்தி சமயத்திலிருந்து கூறிக் கொண்டிருக்கின்றோம். ஆனால், ஒரு காலத்திலும் இதற்கு இலங்கை செவி சாய்க்கவில்லை. இதனை பெரிய நகைச்சுவையாகவே பார்க்க வேண்டியுள்ளது. அரசியல் சாசன சட்டத்தில் இருக்கின்ற ஒரு விடயத்தை மறுபடியும் ஒரு அயல் நாடு வலியுறுத்த வேண்டிய ஒரு கட்டாயம் இலங்கைக்கு இருக்கின்றது. அதை வாயை கூசாமல் இந்தியாவிலிருந்த அனைத்து பிரதமர்களும் செய்து வந்திருக்கின்றார்கள். அதையே இன்றும் நரேந்திர மோடி செய்திருக்கின்றார்.” என அவர் பதிலளித்தார்.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான பல தொடர்புகள் குறித்து பேசப்பட்டுள்ளன. மின்சக்தி, போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டுள்ளன. இது தொடர்பில் உங்களின் பார்வை என்ன?

“இதுவொரு தனியாருக்கான விடயமாகவே நான் பார்க்கின்றேன். நரேந்திர மோடி, அதானிக்காக பேசுகின்ற விடயமாகவே பார்க்கின்றேன். அவருக்கான பேச்சாளராகவே ஒரு பிரதமர் இயங்கிக் கொண்டிருக்கின்றார். கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையம் உள்ளிட்ட திட்டங்களை நரேந்திர மோடி, அதானிக்காக பேசுகின்ற விடயமாக தான் பார்க்க வேண்டியுள்ளது.” என அவர் கூறினார்.

‘சென்னை மற்றும் கொழும்பு ஆகிய நகரங்களுக்கு இடையிலான படகு சேவை மன்மோகன் சிங் காலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆனால் அந்த சேவையை தொடர்ந்து நடத்த முடியவில்லை. ஆட்கள் இல்லை. ஒரு காலத்தில் விமான சேவைகளில் பயணிப்பது செலவு அதிகமாக காணப்பட்டது. அதனால், மக்கள் அந்த காலத்தில் படகு சேவையை பயன்படுத்தினார்கள். இன்றைக்கு அந்த சூழ்நிலை கிடையாது. இலங்கையிலிருந்து சிங்கள மக்களே அதிகமாக இந்தியாவிற்கு வருகின்றார்கள். புத்தகய போன்ற இடங்களுக்கே அவர்கள் செல்கின்றார்கள்.

சென்னைக்கு பொருட்களை வாங்கி இலங்கையில் விற்பது அல்லது தன்னுடைய உறவினர்களுக்காக வருகின்றார்கள். சரக்குகள் அதிகளவில் வருமா என்று தெரியவில்லை. ஏனென்றால், சீன பொருட்களின் ஆதிக்கம் இலங்கையில் மாத்திரம் அல்ல, இந்தியாவிலும் அதிகரித்துள்ளது. பொருத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஆனால் என்னுடைய தொலைநோக்கு பார்வையில் என்ன சொல்ல முடியும் என்றால், இந்த படகு சேவையானது, முன்னர் ஆரம்பிக்கப்பட்ட படகு சேவையை போன்றே இருக்கும்.”

### “அதானியின் வர்த்தக திட்டம் செயலாக்கம் பெறுகிறது”

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானியை சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார். இதன்படி, நரேந்திர மோடி, அதானி மற்றும் ரணில் ஆகியோர் தொடர்பில் உங்களின் பார்வை எவ்வாறு உள்ளது என, அவரிடம் வினவியபோது:

‘ஆம். இந்தியாவிற்கு பெரிய நபர் ஒருவர் விஜயம் செய்து விட்டால், அவர் பிரதமரை பார்க்கின்றாரோ, இல்லையோ... அதானியை பார்க்க வேண்டிய நிலைமை வந்துள்ளது. அதானி தனது வர்த்தக திட்டத்தை கூறியிருப்பார். அவரும் பிரதமரும் ஒன்றையே கூறியிருப்பார்கள். இலங்கை மின்சார சபையின் தலைவர் கூறிய அனைத்து குற்றச்சாட்டுகளும், நேற்றைய சந்திப்புகள் ஏறத்தாழ உண்மை என்று உணர்த்தியிருக்கின்றன. அவர் கூறிய கருத்துக்கள் ஏறத்தாழ உறுதிப்படுத்தும் வகையிலேயே அனைத்தும் நடந்துக்கொண்டிருக்கின்றன. இதில் இலங்கைக்கு ஒரு நட்டம் கிடையாது. சிங்கள இனவாத பிரச்னையோ அல்லது தமிழர் இனப் பிரச்னை தீர்வோ கிடையாது. இதுவொரு வர்த்தகத்தை நோக்காக கொண்ட திட்டம். இந்த திட்டத்தில் அனைவரும் நன்மை பெறுவார்கள் என்ற அடிப்படையிலேயே முன்னெடுக்கின்றார்கள்.” என அவர் குறிப்பிட்டார். ●

# 50 இலட்சம் சுற்றுலா பயணிகளை ஈர்க்க திட்டம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜுலை 25

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கும் வகையில் 25 இலட்சம் உயர்தர பார்வையாளர்கள் உட்பட 50 இலட்சம் சுற்றுலா பயணிகளை ஈர்க்க இலங்கை திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாதங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள ‘விசிட் சிறீ லங்கா’ என்ற அரசாங்கத்தின் புதிய சுற்றுலா உத்தியை அறிவித்த ‘Bocuse d’Or 2023’ போட்டி மற்றும் விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# அஸ்வெசும உதவித் திட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்த பெரமுன எம்.பிக்கள் கோரிக்கை

கொழும்பு, ஜுலை 25

அஸ்வசும உதவித் திட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி, அநீதிக்கு ஆளானவர்களுக்கு நீதி வழங்குமாறு கோரி, உறுப்பினர்கள் கையொப்பமிட்ட கடிதமொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்க அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஏ.டி.ஜகத் குமார இதனை தெரிவித்தார்.

இந்தக் கடிதத்தில் கையொப்பமிடும் நடவடிக்கை கள் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகவும், கடந்த 21ஆம் திகதி வரை ஐம்பத்திரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் அதில் கையொப்பமிட்டுள்ளதாகவும் ஜகத் குமார குறிப்பிட்டார்.

இதற்கு அரசாங்கத்தின் அமைச்சர்கள், எதிர்க்கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டுள்ளதாகவும் சுமார் எழுபது கையொப்பங்களைப் பெற்ற பின்னர் ஜனாதிபதியிடம் மகஜர் கையளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# மீன்பிடித் துறைமுகத்தில் பெண்ணின் சடலம் மீட்பு

கொழும்பு, ஜுலை 25

நீர்கொழும்பு நீதிமன்றத்துக்கு அருகில் உள்ள மீன்பிடி துறைமுகி பகுதியில் 45 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரின் சடலம் பொலிஸாரால் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தின் மூக்கின் வழியாக இரத்தம் கசிந்திருந்ததாகவும், குறித்த பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என தெரிவித்த நீர்கொழும்பு பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# தேயிலை ஆலையில் தீ

கொழும்பு, ஜுலை 25

இரத்தினபுரி, லெல்லுபிட்டிய வெலிமலுவ பிரதேசத்திலுள்ள தனியார் ஒருவருக்கு சொந்தமான தேயிலை தொழிற்சாலை ஒன்று தீ பற்றியது.

இத்தீவிபத்தால் தேயிலைத் தொழிற்சாலையின் பிரதான கட்டடமும் தொழிற்சாலைக்குரிய ஐந்து லொறிகளும் தீயில் எரிந்து சேதமாகியுள்ளன.

இத்தீச்சம்பவத்துக்கான காரணம் குறித்து இதுவரையிலும் அறியப்படாத நிலையில், இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# 35 ரூபாய்க்கு முட்டை!

கொழும்பு, ஜுலை 25

இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் அனைத்து சதொச விற்பனை நிலையங்களிலும் 35 ரூபாய்க்கு பெற்றுக்கொள்ள முடியும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

எதிர்வரும் வாரத்துக்குள் இந்தச் செயல்முறையை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஒரு நாளைக்கு 100,000 முட்டைகளைச் சந்தைக்கு வெளியிட எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார். (அ)



காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தின் பாற்குடபவனி நேற்று திங்கட்கிழமை காலை மிகவும் சிறப்பாக இடம் பெற்றது. (அ)









# சமுதாயத்தில் சக்தி வாய்ந்த பெரும் சொத்து பெண்களே!

## கல்முனையில் மேலதிக அரசஅதிபர் ஜெகதீசன்

கல்முனை, ஜூலை 25

"ஒரு சமுதாயத்தில் மிகவும் சக்தி வாய்ந்த மாபெரும் சொத்து பெண்களே. அவர்களது உரிமைகள் சுதந்திரங்கள் அவர்கள் கையில் இருக்கின்றன. மாறாக ஆண்கள் கையில் அல்ல."

-இவ்வாறு கல்முனையில் சமூக செயற்பாட்டு சான்றிதழ் கற்கைநெறியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பு ஏற்பாடு செய்த மூன்று மாத கால சமூக செயற்பாடு சான்றிதழ் கற்கை நெறியின் அங்குரார்ப்பண வைபவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பெண்கள் வலையமைப்பின் தலைவி திருமதி தியாகேஸ்வரி ரூபன் தலைமையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

அங்கு மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் மேலும் தெரிவிக்கையில்-

இங்கு வழங்கப்படும் பயிற்சி உங்கள் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமையட்டும். இதற்கு பெறுமதியே இல்லை. கல்விக்கு உரிய பெறுமதியை யாரும் அளித்துவிட முடியாது. இதனை முறையாக பயன்படுத்துங்கள்-என்றார்.

இந்த நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.ஏ. அசீஸ் சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ஐ.எல்.எம்.இர்பான் வலையமைப்பின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி திருமதி அருந்தவராஜா துளாஞ்சனி, பொதுச்சபைத் தலைவி திருமதி கலைவாணி தயாபரன், வலையமைப்பின் செயலாளர் திருமதி ஜெனிதா மோகன் வலையமைப்பின் பொருளாளர் திருமதி டெலினா றொசய்ரோ மற்றும் அமைப்பின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# சித்தானைக்குட்டி சுவாமிகளின் 72 ஆவது குருபூசை தினம் நாளை



காரைதீவு, ஜூலை 25

பாரத நாட்டின் இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள பெருநாழி இராச்சியத்தின் சிற்றரசரின் மகனாக அவதரித்து காரைதீவில் ஜீவ சமாதி நிலையில் அமர்ந்திருந்து குருவருள் பாலிக்கின்ற ஜீவ சித்தர் சிறீ சித்தானைக்குட்டி சுவாமிகளின் குருபூசையும் அன்னதானமும் நாளை புதன்கிழமை சிறப்பாக நடைபெறவிருக்கிறது என ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி. நந்தேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நேற்று திங்கட்கிழமை சித்தர் பெருமானின் முத்துச்சப்பிர ஊர்வலம் காரைதீவு தேரோடும் வீதி வழியாக இடம்பெற்றது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அபிஷேகம், கோமாதா பூசை, 210 சித்தர்களுக்குரிய மகா யாகமும் பூசையும் தொடர்ந்து அன்னதானமும் இடம் பெறும் .

மாலை 5.00 மணிக்கு திருவிளக்கு பூசை இடம் பெறும் .

நாளை புதன்கிழமை காலை 05.00 மணிமுதல் காலை 08.00 மணிவரை அடியவர்கள் காரையடிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து பாற்குடத்துடன் பவனி வந்து சித்தருக்கு தங்கள் கரங்களால் பாலபிஷேகம் செய்யும் நிகழ்வு இடம்பெறும் தொடர்ந்து அபிஷேக பூசை இடம்பெறும்.

10.00 மணிக்கு கூட்டுப்பிரார்தனை (பஜனை) இடம்பெறும்.

மதியம் 12.30 மணிக்கு குரு பூசை நிகழ்வு இடம்பெற்று அன்னதான (மகேஸ்வர பூசை) நிகழ்வு இடம்பெறும்.

அதேவேளை

பி.ப 4.00 மணிக்கு கல்விச் சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறும்.

மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை சுவாமிகளுக்கான திருவூஞ்சல் நிகழ்வும் தொடர்ந்து கலைநிகழ்சிகளும் இடம்பெறும்.

இறுதியில் 27.07.2023-வியாழக்கிழமை மாலை 07.00 மணிக்கு வைரவருக்கான இடும்பன் பூசையும் வாழிபாடுதலும் இடம்பெறும்-என்றார். (அ)




# மட்டக்களப்பு மேற்கு வலய தமிழ்மொழித் தினப்போட்டி

மட்டக்களப்பு, ஜூலை 25

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய, தமிழ் மொழித்தின வலய மட்டப் போட்டியின் இறுதி நிகழ்ச்சி கடந்த வெள்ளிக்கிழமை குறிஞ்சாமுனை சக்தி வித்தியாலய மண்டபத்தில் இடம் பெற்றது.

வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் செ.மகேந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்ச்சியில் கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம், கிழக்கு பல்கலைக்கழக தமிழ் கற்கைகள் துறையின் தலைவர் பேராசிரியர் சி.சந்திரசேகரம், உதவிக்கல்விப் பணிப்பாளர் க.குணசேகரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது தமிழ்மொழித் தினப்போட்டியில் முதல் இடத்தினைப் பெற்ற ஐந்து நிகழ்ச்சிகள் ஆற்றுகை செய்யப்பட்டன.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

குறித்த வலயத்தின் கல்விப் பணிப்பாளராக இருந்து மாகாண கல்விப் பணிப்பாளராக உயர்வு பெற்று சென்ற செல்வி அகிலா கனகசூரியம் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து வாழ்த்துப்பா பாடி, மடல் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இதனை வலயத்திற்குட்பட்ட தமிழ் பாட ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர், உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் இணைந்து இதனை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

வலய தமிழ் மொழித்தினப் போட்டியில் மண்முனை மேற்கு கோட்டம் முதலிடத்தினையும், மண்முனை தென்மேற்கு கோட்டம் இரண்டாம் இடத்தினையும் ஏறாவூர் பற்று கோட்டம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டது. (அ)

# விக்கினேஸ்வர வித்தியாலய நூற்றாண்டு விழா நிகழ்வுகள்

மட்டக்களப்பு, ஜூலை 25

மட்டக்களப்பு கதிரவெளி விக்கினேஸ்வரா வித்தியாலயம் தேசிய பாடசாலையின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் பாடசாலை அதிபர் சி. அரசரெட்டிணம் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

பிரதமஅதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் எ.அரவிந்தகுமார், கௌரவ அதிதிகளாக இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன், பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் சிறப்பு அதிதிகளாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலாளர் ஜி.அருணன், கல்குடா வலய கல்வி பணிப்பாளர் ரி.அனந்தரூபன், வாகரை வடக்கு கோட்டகல்வி பணிப்பாளர், மற்றும் பாதுகாப்பு அதிகரிகள், ஆசிரியர்கள், பெற்றேர்கள், பழைய மாணவர்கள்,



மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

அதிதிகள் வரவேற்பு, கொடியேற்றுதல், மங்கல விளக்கேற்றல், கலை நிகழ்வுகள், நூற்றாண்டு விழா 'கதிராழி' சஞ்சிகை வெளியீடு ,சேவை நலன் பாராட்டுக்கள், அதிதிகள் உரை என்பன இடம்பெற்றன.

இதன்போது பாடசாலையில் சாதாரண, உயர்தர பரீட்சைகள் மற்றும் 5ஆம் தர புலமை பரீட்சைகளில் சித்தி அடைந்து சாதனை படைத்து கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவர்களுக்கு சின்னங்களும் பதக்கங்களும் அணிவிக்கப்பட்டன.

கல்லூரி தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட உதை பந்து, கரப்பந்து, எல்லே மற்றும் கிரிக்கெட், மென்பந்து சுற்றுப் போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளுக்கு பதக்கங்களும் வெற்றிக்கிண்ணங்களையும் அதில் கலந்துகொண்ட அதிதிகள் வழங்கினர். (அ)

# திருக்கோவில் வலயத்தின் தமிழ்மொழித் தினவிழா



காரைதீவு, ஜூலை 25

திருக்கோவில் வலயத்திற்கான 2023 அகில இலங்கை தமிழ் மொழித்தின ஆரம்ப விழா அக்கரைப்பற்று சிறீ ராமகிருஷ்ணா கல்லூரி தேசிய பாடசாலையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. கமலமோகனதாசன் தலைமையில் நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இரா. உதயகுமார், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பி.பபாகரன், வைத்தியர் திருமதி. குணாளினி ஆகியோர் பிரதம ஆதியாக கலந்து சிறப்பித்தனர்.

இப் போட்டி நிகழ்ச்சிகளில் நாற்பதுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் மாணவ, மாணவிகள் பங்குபற்றி திறமைகளை வெளிக்காட்டியிருந்தனர். (அ)



# ஆப்கான் மக்களை வதைக்கும் மழை!

## 200இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

காபூல், ஜூலை 25

**மத்திய ஆப்கானிஸ்தானில் அண்மைக்காலமாகக் கடும் மழை பெய்து வருகின்றது. குறிப்பாக கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து பெய்து வரும் கடும்மழைகாரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 31 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 40 இற்கும் மேற்பட்டோர் காணாமற்போயுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது குறித்து மாநில செய்தித் தொடர்பாளர் சபியுல்லா ரஹிமி கூறுகையில்-

இக்கடும் மழைகாரணமாக ஜல்ரெஸ் மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அம்மாவட்டத்தில் மாத்திரம் 604 வீடுகள் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் விவசாய நிலங்கள் சேதமடைந்துள்ளன.மேலும் கடந்த நான்கு மாதங்களில் மாத்திரம் நாடுமுழுவதும் 214 பேர் இயற்கை பேரழிவு காரணமாக உயிரிழந்துள்ளனர் - என்றார்.

(அ)

# ஸ்பெயின் பொதுத் தேர்தல்; தொங்கு பாராளுமன்றம்!

மர்ரிட், ஜூலை 25

ஸ்பெயின் பொதுத் தேர்தலில் புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான தெளிவான முடிவு கிடைக்கவில்லை. தொங்கு பாராளுமன்றம் அமையும் சூழலே ஏற்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு 11:45 மணிக்கு 99 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், கன்சர்வேடிவ் எதிர்க் கட்சியான மக்கள் கட்சி 136 இடங்களையும், பிரதமரின் ஆளும் சோசலிஸ்ட் தொழிலாளர் கட்சி 122 இடங்களையும் பெற்றிருந்தது.

கிங்மேக்கர்களாக இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் கொண்ட தீவிர வலதுசாரி வோக்ஸ் 33 இடங்களிலும், தீவிர இடதுசாரி சுமர் 31 இடங்களிலும் முன்னிலை பெற்றன.

பாலின வன்முறை, பாலின உரிமைகள், கருக்கலைப்பு மற்றும் கருணைக்கொலை பற்றிய சட்டங்களை திரும்பப் பெறுவதற்கான ஒரு தளதத்தில் பிரச்சாரம் செய்த வோக்ஸ் கட்சி, நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட 19 இடங்களை இழந்துள்ளது.

சான்செஸின் சோசலிஸ்டுகள் மற்றும் கூட்டணி கட்சிகள் மொத்தம் 172 இடங்களைப் பெற்றுள்ளன. அதே நேரத்தில் ஆல்பர்டோ நுனெஸ் பீஜூவின் மக்கள் கட்சி மற்றும் பங்காளிகளை கொண்ட வலது அணி 170 இடங்களைப் பெற்றிருக்கலாம்.

இதனால் ஸ்பெயின் மீண்டும் ஒருமுறை, அரசியல் குழப்பத்தில் சிக்கியுள்ளது.

ஓகஸ்ட் 17ஆம் திகதி புதிய பாராளுமன்றம் கூடிய பிறகு அரசு அமைப்பதற்கான பேச்சுவார்த்தை தொடங்கும். (அ)





# அதிரடித் தடை விதித்த இந்தியா கடும் அதிர்ச்சியில் உலக நாடுகள்

புதுடில்லி, ஜூலை 25

இந்தியாவின் வட மாநிலங்களில் அண்மைக்காலமாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக அங்கு நெல் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்தியாவில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் விதமாக மத்திய அரசு, பாஸ்மதி அல்லாத அரிசி ஏற்றுமதிக்குத் தடை விதித்துள்ளது. இதனால் சர்வதேச அளவில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு விலை உயரும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தியாவின் அரிசி ஏற்றுமதித் தடையால் பல்வேறு நாடுகள் பாதிக்கப்படும் எனக் கூறப்படுகிறது. குறிப்பாக அமெரிக்காவுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள் ளது.

இதையடுத்து சுப்பர் மார்க்கெட்டுகளில் அரிசி வாங்க மக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர். இது தொடர்பான வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.

அமெரிக்காவில் அரிசியைப் பிரதான உணவாக உடகொள்ளும் ஆசிய சமூகத்தினர் அனைத்து வகை அரிசி வகைகளையும் வாங்கிச் செல்வதால் அரிசி விற்பனையில் கடுமையான கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

சில கடைகளில் ஒரு நபருக்கு ஒரு அரிசி பை என்ற வரம்பில் அரிசி விற்பனை செய்யப்படுவதாகவும் இதேபோல் தேவை அதிகரிப்பது தெரிந்ததும் பல கடைகள் அரிசியின் விலையை உயர்த்தி வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய அரிசி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு 40 சதவீதமாக உள்ளது. இந்தியாவிலிருந்து 140க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# நாடுகளை எச்சரிக்கும் வானிலை மாற்றங்கள்

## உணவு உற்பத்தியில் பாதிப்பு

ஜெனிவா, ஜூலை 25

உலக நாடுகளில் வானிலையானது இதற்கு முன்னர் காணப்படாதவாறு கடும் வெப்பம் நிலவி வரும் நிலையில் பல நாடுகளில் உணவு உற்பத்தி மிக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய அரிசி ஏற்றுமதியாளரான இந்தியா, தனது உள்நாட்டில் அரிசி விலையேற்றத்தை தவிர்க்க, அநெக வகையான அரிசிகளுக்கு ஏற்றுமதி தடை விதித்துள்ளது.

அமெரிக்காவிலிருந்து சீனா வரையில் கடும் வெப்பம் நிலவி வருவதோடு எல் நினோ எனும் பருவகால வானிலை மாற்றங்கள் கடுமையாக பொது மக்களை பாதித்து வருகிறது .

இந்நிலை இன்னும் தீவிரமடையலாம் என வானிலை ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.

உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையில் நடைபெற்று வரும் போர் காரணமாக, உக்ரைன் துறைமுகங்களிலிருந்து கோதுமை, சோளம் உட்பட தானிய ஏற்றுமதிக்கு அனுமதியளிக்கும் “கருங்கடல் ஒப்பந்தம்” எனும் உடன்படிக்கையிலிருந்து ரஷ்யா வெளியேறியுள்ளமையும் பல நாடுகளின் உணவு உற்பத்தியில் தாக்கம் செலுத்தியுள்ளது.

(அ)

# பூனை, நாய் இறைச்சி விற்பனைக்குத் தடை

ஜகார்த்தா, ஜூலை 25

இந்தோனேசியாவின் சுலவேசி தீவில் உள்ள சந்தையில் பூனை, நாய் இறைச்சியின் விற்பனைக் குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்தையில் பூனை, நாயுடன் வெளவால், எலி, பாம்பு, குரங்கு ஆகியவையும் விற்கப்பட்டு வந்தன.

இந்தோனேசியாவில் பூனை, நாய் இறைச்சி யின் வர்த்தகத்தை நிறுத்தியிருக்கும் முதல் சந்தை இது என்று விலங்கு உரிமை அமைப்பு தெரிவித் தது.

இந்த தடை மூலம் பல்லாயிரம் விலங்குகள் காப்பாற்றப்பட்டிருப்பதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.



குறித்த சந்தையில் விலங்குகள் அடிக்கப்பட்டும் சுடப்பட்டும் கொல்லப்பட்டதுடன், உயிருடன் இருக்கும்போதே அவற்றின் உரோமம் எரிக்கப்பட்டதாகவும் விலங்குநல ஆர்வலர்கள் கூறியுள்ளனர்.

உலகில் நாய், பூனை இறைச்சியின் விற்பனையை அனுமதிக்கும் ஒரு சில நாடுகளில் இந்தோனேசியாவும் ஒன்றாகும். (அ)



பாகிஸ்தானுடனான டெஸ்ட்

# 166 ஓட்டங்களுக்கு சுருண்டது இலங்கை

கொழும்பு, ஜூலை 25

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் 166 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது இலங்கை அணி.

இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் அணி இரு டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. காலியில் நடந்த முதல் டெஸ்டில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

இந்நிலையில், இரண்டாவது போட்டி நேற்று கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியது இலங்கை அணி.

48.4 ஓவர்கள் மாத்திரமே எதிர்கொண்ட இலங்கை சார்பாக நால்வரே 10 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர்.

திமுத் கருணாரட்ன (17), தினேஷ் சந்திமால் 34), தனஞ்சய டி சில்வா (57), ரமேஷ் மெண்டிஸ் (27) ஆகிய நால்வரே இரு இலக்க எண்ணிக்கையைப் பெற்றனர்.

36 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்கள் என்ற இக்கட்டான சூழ்நிலையில் இணைந்த தினேஷ் சந்திமால், தனஞ்சய டி சில்வா ஆகிய இருவரும் 5ஆவது விக்கெட்டில் 85 ஓட்டங்களைப் பகிர்ந்து இலங்கை அணி ஓரளவு கௌரவமான நிலையை அடைய உதவினர்.

இந்தத் தொடரில் தனஞ்சய டி சில்வா தொடர்ச்சியாக பெற்ற 3ஆவது அரைச் சதம் இதுவாகும்.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில் அப்ரார் அஹ்மத் 69 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் நசீம் ஷா 41 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)



# ஆஷஷ் 4ஆவது டெஸ்ட் மழையால் சமநிலை!

மன்செஸ்டர், ஜூலை 25

நடப்பு ஆஷஷ் தொடரின் நான்காவது டெஸ்ட் போட்டி மழையால் சமநிலையில் முடிவடைந்தது. இதனால் அவுஸ்திரேலிய அணி தொடரை தக்க வைத்துள்ளது.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் நடப்பு ஆஷஷ் தொடரில் அவுஸ்திரேலிய அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. முதல் 2 போட்டிகளில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது. மூன்றாவது போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. நான்காவது போட்டி மன்செஸ்டரில் கடந்த 19ஆம் திகதி தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி பந்து வீச்சு தெரிவு செய்தது. முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலியா 317 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இங்கிலாந்து அணி 592 ஓட்டங்கள் குவித்து முதல் இன்னிங்ஸில் 275 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் முதல் 4 விக்கெட்களை விரைந்து இழந்தது.

லபுஷான் மற்றும் மிற்செல் மார்ஷ் இடையிலான கூட்டணி அந்த அணிக்கு அவசியமானதாக அமைந்தது. இருவரும் 103 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். லபுஷான், 111 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இருந்தும் நான்காவது நாள் ஆட்டத்தின் முதல் பகுதி மற்றும் ஐந்தாம் நாள் ஆட்டம் முழுவதும் மழையால் பாதிக்கப்பட்டது. இதனால் போட்டியில் முடிவு எட்டப்படவில்லை. இதனால், போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

மழை இங்கிலாந்து அணியின் வெற்றியை பறித்து விட்டதாக அந்த அணியின் ரசிகர்கள் சொல்லி வருகின்றனர். கடந்த முறை ஆஷஷ் தொடரை அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது. அதனால் நடப்பு ஆஷஷ் தொடரை அந்த அணி தக்கவைத்துள்ளது. ஏனெனில், நடப்பு ஆஷஷ் தொடரில் முதல் 4 போட்டிகளில் அவுஸ்திரேலியா 2 போட்டிகளிலும் வெற்றி, இங்கிலாந்து ஒரு போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளது. ஒரு போட்டி சமநிலை ஆகியுள்ளது. இந்த தொடரின் 5ஆவது போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றாலும் தொடரை ஆஸி. தக்க வைக்கும்.

மகளிர் உலகக் கிண்ணம்

# போர்த்துக்கல் அணியை வீழ்த்தியது நெதர்லாந்து!

டுனெடின், ஜூலை 24

மகளிர் உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரின் லீக் ஆட்டத்தில் நெதர்லாந்து அணி 1-0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் அணியை வீழ்த்தியது.

2023 மகளிர் உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடர் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் நடக்கிறது. இந்நிலையில் குழு இ பிரிவில் இடம்பெற்றுள்ள நெதர்லாந்து, போர்த்துக்கல் அணிகள் இடையேயான லீக் ஆட்டம் டுனெடின் நகரில் உள்ள மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் நெதர்லாந்து அணி வீராங்கனைகள் சிறப்பாக விளையாடி போர்த்துக்கல் அணியை வீழ்த்தினர். ஆட்டம் தொடங்கியதுமே, விறுவிறுப்பாக விளையாடிய நெதர்லாந்து 13ஆவது நிமிடத்திலேயே கோல் அடித்து முன்னிலை பெற்றது.

கோர்ணர் வாய்ப்பில் கிடைத்த பந்தை அந்த அணி வீராங்கனை ஸ்டெபாயின் வான் டெர் கிராக்ட் தலையால் முட்டி கோலாக்கினார். இதையடுத்து நெதர்லாந்து 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இதைத் தொடர்ந்து, கோல் அடிக்க போர்த்துக்கல் அணி வீராங்கனைகள் முயன்றனர். ஆனால், அதை நெதர்லாந்து வீராங்கனைகள் இலாவகமாக தடுத்தாடினர். இறுதி வரை இந்த நிலை நீடிக்கவே 1-0 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து அபார வெற்றி பெற்றது.

இதுவரை இ குழுவில் அமெரிக்கா, நெதர்லாந்து அணிகள் தலா ஒரு வெற்றியைப் பெற்றுள்ளன. போர்த்துக்கல், வியட்நாம் அணிகள் தலா ஒரு தோல்வியைச் சந்தித்துள்ளன. (ஐ)





இந்தியாவுடனான டெஸ்ட்

# மே. இ. தீவின் வெற்றிக்கு 365 ஓட்டங்கள் இலக்கு!

போர்ட் ஒவ் ஸ்பெயின், ஜூலை 25

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் இஷான் கிஷன் 33 பந்துகளில் அரைச்சதம் விளாசினார்.

இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 364 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது.

இரு அணிகளும் தற்போது 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றன. முதல் போட்டியில் இந்தியா வெற்றி பெற்ற நிலையில் இரண்டாவது போட்டி போர்ட் ஒவ் ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது.

இதில் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 438 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதில் கோலி சதம் பதிவு செய்தார். ரோஹித் சர்மா, ஜெய்ஸ்வால், ஜடேஜா மற்றும் அஸ்வின் அரைச்சதம் பதிவு செய்திருந்தனர்.

தொடர்ந்து முதல் இன்னிங்ஸில் விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 255 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. சிராஜ் 5 விக்கெட்களை கைப்பற்றினார்.

இரண்டாவது இன்னிங்ஸில் இந்தியா 2 விக்கெட்கள் இழப்புக்கு 181 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

அணித் தலைவர் ரோஹித் சர்மா 44 பந்துகளில் 57 ஓட்டங்கள் குவித்தார். ஜெய்ஸ்வால் 30 பந்துகளில் 38 ஓட்டங்கள் எடுத்தார். கில் 37 பந்துகளில் 29 ஓட்டங்கள் எடுத்தார்.

நான்காவது வீரராகக் களமிறங்கிய இஷான் கிஷன், 34 பந்துகளில் 52 ஓட்டங்கள் எடுத்தார். 4 பௌண்ட்ரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் இதில் அடங்கும். 365 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை மேற்கிந்தியத் தீவுகள் அணி விரட்டி வருகிறது. (ஐ)

# கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள்; கலிஸை பின்தள்ளினார் கோலி



போர்ட் ஒவ் ஸ்பெயின், ஜூலை 25

சர்வதேச கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் பட்டியலில் விராட் கோலி தென்னாபிரிக்க வீரர் ஜக் கலிஸை பின்னுக்குத் தள்ளி 5ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விராட் கோலி சதமடித்து அசத்தினார். அவர் 206 பந்துகளில் 121 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். அவரது அசத்தலான சதம் சர்வதேச கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் பட்டியலில் அவரை 5ஆவது இடத்துக்கு முன்னேறச் செய்தது.

சர்வதேச கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் பட்டியலில் தற்போது சச்சின் டெண்டுல்கர் (34,357 ஓட்டங்கள்), குமார் சங்கக்காரா(28,016 ஓட்டங்கள்), ரிக்கி பொண்டிங் (27,483 ஓட்டங்கள்), மஹேல ஜெயவர்த்தன (25,957 ஓட்டங்கள்) மற்றும் விராட் கோலி (25,548 ஓட்டங்கள்) ஆகியோர் முதல் 5 இடங்களில் உள்ளனர்.

25,534 ஓட்டங்களுடன் 5ஆம் இடத்தில் இருந்த தென்னாபிரிக்க வீரர் ஜக் கலிஸை பின்னுத் தள்ளி விராட் கோலி 5ஆம் இடத்தை பிடித்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்கள் இப்போது சமஷ்டி கோரவில்லை!

## பிரதமர் தினேஷ் கூறுகிறார்



**கொழும்பு, ஜூலை 25**

**"தமிழ் மக்கள் நிம்மதியுடன்தான் வாழ விரும்புகின்றார்கள். அவர்கள் ஒற்றையாட்சி வேண்டும் என்றோ சமஷ்டி வேண்டும் என்றோ விடுதலைப்புலிகள் கோரிய தனிநாடு வேண்டும் என்றோ ஒருபோதும் கோரவில்லை."**

-இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

தமிழர்கள் ஒற்றையாட்சியைக் கோருகின்றார்களா? சமஷ்டியாட்சியைக் கோருகின்றார்களா? தனி நாட்டைக் கோருகின்றார்களா? என்பதை அறியத் துணிவு இருந்தால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் சவால் விடுத்திருந்தார். இது தொடர்பில் பிரதமர் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமஷ்டிக் கோரிக்கையையும் தனி நாட்டுக் கோரிக்கையையும் விடுதலைப்புலிகளும் தமிழ் அரசியல்வாதிகளும்தான் கோரி வந்தனர். ஒரு பக்கத்தில் தமிழ் அரசியல்வாதிகள் சமஷ்டி வேண்டும் என்று கோர மறுபக்கத்தில் விடுதலைப்புலிகள் தனி நாடு வேண்டும் என்று கோரினார்கள். இறுதியில் ஒன்றும் நடக்கவில்லை. இந்த ஒற்றையாட்சி நாட்டுக்குள்தான் மூவின மக்களும் இன்று வாழ்கின்றார்கள்- என்றார். (அ)

# மீன்பிடித் துறைமுகத்தில் பெண்ணின் சடலம் மீட்பு

கொழும்பு, ஜூலை 25

நீர்கொழும்பு நீதிமன்றத்துக்கு அருகில் உள்ள மீன்பிடி துறைமுகப் பகுதியில் 45 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரின் சடலம் பொலிஸாரால் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தின் மூக்கின் வழியாக இரத்தம் கசிந்திருந்ததாகவும், குறித்த பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என தெரிவித்த நீர்கொழும்பு பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# 2022 ஆம் ஆண்டில் 463 யானைகள் பலி



கொழும்பு, ஜூலை 25

கடந்த வருடத்தில் மாத்திரம் 463 யானைகள் உயிரிழந்துள்ளதாக இலங்கையின் சுற்றாடல் மற்றும் இயற்கை ஆய்வுகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

மையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் கலாநிதி ரவீந்திர காரியவசம் இதனை கூறினார்.

அத்துடன், கடந்த பத்தாண்டுகளில் ஒரு வருடத்தில் பதிவான அதிக யானை உயிரிழப்புகளின் எண்ணிக்கை இது என அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலை தொடருமானால், இலங்கையில் காட்டு யானையைக் கண்டறிவது அரிதான நிகழ்வாகிவிடும் என கலாநிதி ரவீந்திர காரியவசம் மேலும் கூறினார். (அ)

# 34.3 மில்லியன் ரூபா மோசடி; பொலிஸாரால் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 25

வீடுகளை நிர்மாணிக்கும் தனியார் நிறுவனம் ஒன்றை நடத்திச் செல்வதாக கூறி, 34.3 மில்லியன் ரூபா மோசடியில் ஈடுபட்ட ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

அவருக்கு எதிராக நுகேகொடை மற்றும் மாலபே பொலிஸ் நிலையங்களில் 26 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைதானவர் கடுவளை பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

அவரிடமிருந்து போலி தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு என்பனவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (அ)

# யாழ்.பல்கலை விவசாய பீடத்தில் திறன் மேம்பாட்டுச் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல் நகரில் உள்ள விவசாய பீடத்தில் மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டு நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி, சனிக்கிழமை நடைபெற்றது.

அமெரிக்கா தூதுவராலயத்தில் இருந்து யாழ்ப்பாணம் அமெரிக்கன் கோணர் ஊடாக வழங்கப்பட்ட நிதியுதவின் கீழ் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ். வசந்தரூபா, செயற்றிட்ட இணைப்பாளர் கலாநிதி ரெ. சுவந்தினி மற்றும் விரிவுரையாளர்கள், மாணவர்கள், விவசாயிகள், விவசாயத் துறை சார்ந்து வேலை செய்யும் பங்காளர்கள் என பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.



இந்தப் பயிற்சி பட்டறையில் 51 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். இந்த நிகழ்வில் மாணவர்களுக்கு விவசாயத் துறை சார்ந்து இருக்கும் பிரச்னைகள் மற்றும் மாணவர்களுக்கு இந்தப் பிரச்னைகள் சார்ந்து மற்றும் வேறு வகைகளில் இருக்கக்கூடிய வாய்ப்புகள் பற்றி பயனுள்ள வகையில் கலந்துரையாடப்பட்டது.

மேலும், விவசாயத்துறையில் உள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காணப் பங்களிக்கும் நவீன தொழில்நுட்பங்கள் பற்றி வயம்ப பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி எஸ். சுரந்தவினால் விளக்கமும் செயன்முறைப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. பின்னர் யாழ் அமெரிக்கன் கோணர், யாழ்ப்பாணம் மற்றும் யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பயிற்சியாளர்களால் தலைமைத்துவம், கருத்து வெளிப்பாடு, தன்னம்பிக்கை சார்ந்து செயற்பாட்டு பயிற்சிகளும் வழங்கப்பட்டன. (அ)

# ரயிலில் மோதுண்டு பெண் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 25

அனுராதபுரம் கல்கிரியாகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெல்லியகம பிரதேசத்தில், பெண்ணொருவர் ரயிலில் மோதுண்டு நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியாகம பலாகல பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயது பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டே குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

பிரேதப் பரிசோதனைக்காக தம்புள்ளை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சகல எரிபொருட்களுக்கும் ஓகஸ்டில் விலை நிர்ணயம்!

## எரிசக்தி இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, ஜூலை 25

சீனாவின் சினோபெக் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், அடுத்த மாதம் முதலாவது வாரத்தில் முதல் மொத்த எரிபொருள் இலங்கையை வந்தடையும் என்று எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அடுத்த மாதத்தின் முதல் வாரத்தில், முதல் இரண்டு இறக்குமதிகள் சினோபெக்கில் இருந்து வரும். முதல் மாதத்திற்குள் சமன்பாட்டிலிருந்து டொலர் தொகையை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபம் 20 சதவீதத்தால் குறைக்க முடியும் என்று நம்புகிறோம்.

மேலும், மாதந்தோறும் 45 சதவீதம் வரை வெளியேறும் டொலர்களின் அளவைக் குறைக்க முடியும். அதனுடன் ஒப்பிடுகையில், நிதி அமைச்சுடன் விவாதித்து கியூ. ஆர். குறியீட்டை அதிகரிக்கலாம் அல்லது முழுமையாக நீக்கிவிடலாம்.

ஒகஸ்ட் மாதத்திலிருந்து, அனைத்து நிறுவனங்களையும் பாதிக்காத வகையில் விலை சூத்திரத்தைப் பயன்படுத்த நாங்கள் நம்புகிறோம். மேலும் அமைச்சால் ஒவ்வொரு மாதமும் அதிகபட்ச விலையை நிர்ணயம் செய்வோம்.

பெற்றோலின் அதிகபட்ச விலை இவ்வளவு, டீசல் இவ்வளவு, 95 இவ்வளவு, சூப்பர் டீசல் இவ்வளவு என்று அதிகபட்ச விலை மட்டுமே தீர்மானிக்கிறது. அதன் பிறகு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இந்தியன் ஒயில் நிறுவனம் மற்றும் மூன்று புதிய நிறுவனங்களும் அதிகபட்ச விலைக்கு உட்பட்டு விரும்பிய விலையில் விற்கும் திறனைக் கொண்டுள்ளன.

ஒரு நிறுவனம் விலையை குறைக்கும் போது, மற்ற நிறுவனம் அதிக போட்டித்தன்மையுடன் நாட்டில் எண்ணெய் விலையை குறைக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்- என்றார். (அ)

## 13தொடர்பில்...

நித்திரையில் இருந்து எழுந்ததை போல் கருத்துரைக்கிறார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்த அரசாங்கங்கள் ஏன் 13 ஆவது திருத் தத்தை நடைமுறைப்படுத்தவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழர்களின் அரசியல் பிரச்னை, அதி கார பகிர்வு ஆகியவற்றை தனது அரசிய உலுக்காக பயன்படுத்திக் கொள்கிறார். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாகாண சபைகளை முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ தோற்றுவித்தார். அதனை கூட தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாக்க வில்லை.

இனப்பிரச்னைக்கு தீர்வாக அறிமுகப் படுத்தப்பட்ட மாகாண சபைகள் முறை மையை நல்லாட்சி அரசாங்கம் பல வீனப்படுத்தி, மாகாண சபை வெள்ளை யானை போன்றது என்ற நிலைப் பாட்டை தோற்றுவித்தது. மாகாண சபை முறைமை நெருக்கடிக்கு உள்ளாக் கப்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக்கூற வேண் டும்.

13ஆவது திருத்தம் மற்றும் அதிகார பகிர்வு தொடர்பில் சர்வ கட்சி கூட் டத்தை நடத்த ஜனாதிபதி தீர்மானித் துள்ளார். சுதந்திர மக்கள் சபைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதி காரப் பகிர்வு விவகாரத்தில் ஏனைய அரசியல் கட்சிகளுடன் பேச்சில் ஈடுபட முன்னர் சிறீ லங்கா பொதுஜன பெரமுன வுடன் ஜனாதிபதி பேச்சில் ஈடுபட வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த காலங்களில் எத்தனையோ சர்வ கட்சி கூட்டங்களை நடத்தி விட்டார். ஆனால், தீர்வு கிடைக்கவில்லை. தமி ழர்களையும் சர்வதேசத்தையும் ஏமாற் றுவதற்காக சர்வகட்சி என்ற நாடகத்தை அரங்கேற்றுவதற்கு முன்னர் பொதுஜன பெரமுனவின் நிலைப்பாட்டை அவர் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும் - என்றார். (ஐ)

## போர்....

சமூகத்தின் சார்பில் பிரித்தானிய தமிழர் பேரவை பாராளுமன்றத்தின் பத்தாவது குழு அறையில் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

பிரிட்டனின் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற இந்த நிகழ்வில் உரையாற்றிய அவர்கள்,

தற்போதைய நல்லிணக்கம் மற்றும் உண்மை ஆணைக்குழு உட்பட இலங் கையில் உருவாக்கப்பட்ட அனைத்து ஆணைக்குழுக்களும் சர்வதேச சமூ கத்தை ஏமாற்றுவதற்காகவே ஏற்படுத் தப்பட்டன. போர் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப் படுகொலை ஆகியவற்றில் ஈடுபட்டவர் களுக்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதன் மூலம் உலக நாடுகளுக்கு பிரிட்டன் முன்னுதாரண மாக விளங்கவேண்டும் - என்று வலியு றுத்தினர்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் உறவினரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நம்பகதன்மை குறித்தும் நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் கேள்வி எழுப்பி னர். தமிழர்களுக்கு தங்கள் தாயகத்தில் சுயநிர்ணய உரிமை அவசியம் என்றும் இதன்போது வலியுறுத்தினர். (ஐ)

## பொது...

கொடகொட பாராளுமன்றத்தில் கொண்டுவந்த தனிநபர் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்துக்கு பதிலளித்தபோதே சட்ட மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைகளுக்கு 2018இல் தேர்தல் நடந்தது. 2022ஆம் ஆண்டு காலப்பகுதியுடன் இவற்றின் ஆயுள்காலம் நிறைவடைந்த நிலையில் உள்ளூராட்சி அமைச்சரால் ஒரு வருடம் கால நீடிப்பு செய்யப்பட் டது. இதைத் தொடர்ந்து இந்த ஆண்டு முற்பகுதியில் நீடிப்பு கால மும் நிறைவடைந்தது. இந்நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் உள்ளூராட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டு வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டபோதும் தேர்தல் நடைபெறவில்லை. இந்த நிலையிலேயே கலைந்த உள்ளூராட்சி தேர்தலை மீளவும் கூட்டுவதற்கு தனி நபர் பிரேரணை கொண்டு வரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ.எம்.எவ்...

ஓகஸ்ட் முதல் வாரத்தில் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்க திட்டமிடப் பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள் ளது. எவ்வாறாயினும், திருத்தப்பட்ட பந்தயம் மற்றும் சூதாட்ட வரி, கடந்த ஏப்ரல் மாதம் முதல் அமுல்படுத்தப்பட் டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வெள்ளிக்கிழமை...

பேதமுமின்றி ஆதர வளிப்பதுடன், வர்த்தகர்கள், விவசாயிகள், கடற்றொ ழிலாளர்கள், பல்கலைக்கழக மாணவர் கள் என அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முல்லைத்தீவு ஊடக அமை யத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி, செயலா ளர் பிரபாகரன் றஞ்சனா, வவுனியா மாவட்ட தலைவி சிவானந்தன் ஜெனிதா, மன்னார் மாவட்ட தலைவி மனுவல் உதயச்சந்திரா, யாழ்ப்பாண மாவட்ட தலைவி சிவபாதம் இளங் கோதை ஆகியோர் கூட்டாக ஹர்த்தா லுக்கான அழைப்பை விடுத்தனர். (ஐ)

## பி.பி.சி....

தாக்கம் தொடர்பான செய்திகளை சவால்களுக்கு மத்தியில் இலங்கை யிலிருந்து வழங்கியிருந்தார். 2013ஆம் ஆண்டு கொழும்பில் நடந்த பொதுநல வாய உச்சி மாநாடு குறித்த செய்திகளை யும் பி. பி. சிக்காக அறிக்கையிட்டிருந் தார்.

ஆரம்பகாலங்களில் போர் சார்ந்த செய்திகளை அறிக்கையிட்டு புகழ்பெற் றார். 1990களில் சோமாலியா போர் மற்றும் பஞ்சம், 1994 ஈராக்கில் சதாம் ஹூசைன் மேற்கொண்ட குர்திஷ் இனப் படுகொலை, புருண்டி உள்நாட்டு போர், ருவாண்டா இனப்படுகொலை, லைபீ ரியா சிறுவர் போராளிகள் விவகாரம், உகண்டா கலவரம், 1999இல் நடந்த கொசோவா இன சுத்திகரிப்பு, இந்தியா வில் மனித உறுப்புகள் கடத்தல் - வர்த் தகம், பிரேஸிலின் தெருவோர சிறுவர் கள், ஆப்கானிஸ்தான் உள்நாட்டு போர் என்பவற்றையும் இவர் சிறப்பாக அறிக் கையிட்டிருந்தார்.

சிறந்த அறிக்கையிடலுக்காக சர்வ தேச மன்னிப்பு சபையின் விருது உட்பட பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

நீண்டகாலமாக பி. பி. சி. தொலைக் காட்சியில் இரவு 10 மணி செய்தி வாசிப் பாளராகவும் பிரபலம் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2014 ஆம் ஆண்டு அவருக்கு புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட் டது. நோய் தாக்கம் காரணமாக 2022 ஜனவரியில் பணியிலிருந்து விலகியி ருந்தார். (ஐ)

## முதல் அரசியல்...

இராசமாணிக்கம் மண்டபத்தில் நடந்த தியாகிகள் நினைவேந்தல் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் பேசுகையில்,

“நாங்கள் விடுதலைக்காக போராடிய வர்கள் ஒற்றுமையாக செயல்பட்டிருந் தால் எமது இனம் 1983 காலத்துக்கு முன்னர் இருந்த காலத்துக்கு இன்று சென் றிருக்காது. இன்று எங்களை நாங்கள் ஆளும் தனிநாட்டில் இருந்திருப்போம்.

இந்த நாட்டின் பூர்வீக குடிகளான தமிழ் மக்கள் இந்த நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து அடிமைகளாக இரண்டாம்தர ஒடுக்கப்பட்ட மக்களாக வாழ்ந்ததன் பிரகாரம் அந்த உரிமைக் காக அகிம்சை போராட்டத்தை ஆரம் பித்து ஆயுதப் போராட்டத்துக்கு நாங் கள் வலிந்து தள்ளப்பட்டு 2009 மே 18 அந்த ஆயுதப் போராட்டம் மௌனிக் கப்பட்டது.

ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் மிதவாத கட்சியான ஒரு கட்சி மக்களின் உரிமைக்காக போராடியது. அந்த அகிம்சை போராட்டத்தில் நம் பிக்கை இழந்து அதில் வீறு கொண்டு எழுந்த இளைஞர்கள் விடுதலை போராட் டத்துக்கு உள்ளாக்கப்பட்டனர். வெளி நாடுகளில் படித்துக்கொண்டிருந்தவர் கள் இணைந்தனர் அதில் ஒருவர்தான் ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் பத்மநாபா. அவருடன் 13 பேர் உயிரிழந்தனர்.

இந்த நாட்டிலே 1983 இல் இடம் பெற்ற மிக மோசமான இன அழிப்புக்கு பின்னர் விடுதலை போராட்டம் வீறு கொண்டு எழுந்தது, பல போராட்ட இயக்கங்கள் விடுதலை வேண்டிய ஆயு தம் ஏந்தி போராடினாலும் முன்னணி யில் 5 இயக்கங்கள் போராடின. இதில் 3 இயக்கங்கள் தேசிய முன்னணியாக ஒற்றுமையாக செயல்பட 1984இல் அடி எடுத்து வைத்த பின்னர் 1985 விடுதலை புலிகளும் முன்னணியில் இணைந்தனர். 1983 இல் இருந்து 87 வரை உலகத் தமிழர் இடையே பேசும் பொருளாக இருக்கும் 13ஆவது திருத்த சட்டம் அதன் ஊடாக வந்த மாகாண சபை முறைமை சட்டம் ஏற்படுத்தப்பட்டு - 1983 - 1987 இற்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரே ஒரு போராட்ட இயக் கத் தலைவர் கொல்லப்பட்டார். தமிழீழ விடுதலை இயக்ககத்தின் தலைவர் சிறீ சபாரத்தினம் 1986 மே 6ஆம் திகதி கொல்லப்பட்டார்.

1987ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் திகதி இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் மாகாண சபை முறைமை வந்தது. அந்த மாகாண சபையை நடத்துமாறு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இந்தியா வேண்டுகோள் விடுத்தது - அதனை ஏற்றுக் கொண்டனர்.

இடைக்கால நிர்வாக சபைக்கு 11 பேர் நியமிக்கப்பட வேண்டிய தேவை இருந்தது. அதில் 7 பேரை புலிகள் நிய மித்தனர் ஏனைய 4 பேர் இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டனர்.

அதன்பின்னர் அதன் தலைமைத்து வம் யாரிடம் செல்லவேண்டும் என்ற சிக்கல் எழுந்ததால் அது நிறைவேறாது சென்றது. கொல்லப்பட்ட தமிழர் விடுத லைக் கூட்டணி தலைவர் அமிர்தலிங் கத்திடம் மாகாண சபை முறைமையை ஏற்குமாறு கேட்ட போது அதனை அவர் மறுத்தார். அவ்வாறே அதனை ரெலோவும் ஏற்கவில்லை இந்த நிலை யில் ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் பத்ம நாபா எதிர்கால சிந்தனையுடன் இதனை ஏற்றுக்கொண்டதையடுத்து இணைந்த வட, கிழக்கு மாகாண சபை உருவா கியது.

விடுதலைப்புலிகள் கொல்லப்பட்ட முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவு டன் பேச்சில் ஈடுபட்டிருந்தனர். அந்த காலகட்டத்தில் அண்ணன் அமிர்தலிங் கம், யோகேஸ்வரன், மட்டக்களப்பில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சாம் தம்பி முத்து அவரது மனைவி உட் பட தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த பலர் கொல்லப்பட்டனர்.

அன்று 13ஆம் திருத்த சட்டத்தை ஏற்று இருந்தால் இன்று அது பேசும் பொருளாக இருந்திருக்காது. இந்த 1987 மாகாண சபை முறைமை வந்தது தொடக்கம் 2009 மே 18 வரை ஜே. ஆர் ஜெயவத்தனவின் கையை முறுக்கி பலாத்காரமாக அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட வைத்த இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி உட்பட இந்த நாட்டிலே எத்தனை தலைவர்கள் கொல்லப்பட் டார்கள்.

வடக்கு, கிழக்கிலே முதலாவது அரசியல் படுகொலை முன்னாள் யாழ். நகர மேயர் அல்பிரட் துரையப்பா. அவரை சுட்டுக் கொன்றது புலிகளின் தலைவர் பிரபாகரன். அதை தூண்டியது அண்ணன் அமிர்தலிங்கம். அவர், யாழ்ப்பாணத்தில் மேடை ஒன்றில் பேசும் போது அல்பிரட் துரையப்பாவுக்கு இயற்கை மரணம் கிடையாது என பேசி யிருந்தார் அதை தொடர்ந்துதான் அல்பி ரட் துரையப்பா கொல்லப்பட்டார்.

அல்பிரட் துரையப்பா முதலாவது அரசியல் படுகொலை. ஆனால், நாட் டிலே இறுதியான அரசியல் படு கொலை 2009 மே 18 பிரபாகரன் என் பது துரதிர்ஷ்டம். 13ஆவது திருத்த சட் டத்தை முழுமையாக அமுல்படுத்து மாறு கேட்கின்றோம். ஆனால், அது இறுதி தீர்வல்ல. எங்கள் மக்களின் அரசி யல் அபிலாசைகள் 13 இல் உள்ளடக் கப்படவில்லை. அது மேலும் செல்ல வேண்டும் - என்றார். (ஐ)

## சடலத்துடன்...

படி யாழ். போதனா மருத்துவமனை யின் சட்ட மருத்துவ அதிகாரியின் ஆலோச னையின் பின்னரே தர முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

சட்ட மருத்துவ அதிகாரியின் ஆலோசனைப்படி குழந்தையின் சட லத்தை உடல்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு ஒப்படைக்க உத்தரவிடப்பட்டது.

இதையடுத்து, குழந்தையின் சடலத் துடன், நெடுந்தீவில் இருந்து குறிகாட்டு வானுக்கு படகில் வந்த தாயார், வேலணை மருத்துவமனையின் அம்பு லன்ஸ் மூலமாக சடலத்தை யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு வந்துள்ளார்.

மருத்துவமனைக்கு வந்த பின்னர் சடலத்தை எவ்வாறு அம்புலன்ஸில் ஏற்ற முடியும் என்று கேள்வி எழுப்பியது டன், அதிலிருந்து இறங்க விடாமல் பல மணி நேரம் குழந்தையின் சடலத்துடன் தாயார் காக்க வைக்கப்பட்டார்.

நீண்ட இழுபறியின் பின்னர் தாயை நோயாளர் காவு வண்டியில் இருந்து இறங்க அனுமதித்து , குழந்தையின் சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக் காக பிரேத அறையில் ஒப்படைக்கப்பட் டது. (ஐ)

## 13இன்...

பணிமனையில் நேற்று நடத்திய செய்தி யாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரி வித்தார்.

மேலும், “எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப் புடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள இணக் கப்பாட்டின் பிரகாரம் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தும் உறுதிமொழியை வழங்கியுள் ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் பொலிஸ் அதிகாரத்தை பின்னரும் ஏனைய அதிகாரங்களை நடைமுறைப் படுத்தவும் இணக்கப்பாடுகள் எட்டப் பட்டன என்று பாராளுமன்ற உறுப்பி னர் எம். ஏ. சுமந்திரன் அறிவித்திருந் தார். இதற்காக சர்வகட்சி கூட்டம் ஒன் றுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள் ளார். ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதி காரம் கிடைத்திருந்த அனைத்து சந்தர்ப் பங்களிலும் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதுடன் அது இருள் சூழ்ந்த யுகத்துக்கே தள்ளப் பட்டிருந்தது - என்றும் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கை வருமாறு மோடிக்கு அழைப்பு!



கொழும்பு, ஜூலை 25

இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளுமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு இலங்கை அழைப்பு விடுத்துள்ளதென இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரு நாட்கள் பயணம் மேற்கொண்டு கடந்தவாரம் இந்தியா சென்றிருந்தார்.

இதன்போது இந்திய பிரதமரை சந்தித்து பேச்சு நடத்தினார். இதன்போதே மேற்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# காங்கேசன்துறை – நாகபட்டினம் கப்பல் சேவைக்கு 6 மாதம் தேவை

சென்னை, ஜூலை 25

இந்தியாவின் நாகபட்டினத்துக்கும் இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் படகு சேவையை ஆரம்பிக்க இன்னும் 6 மாதங்கள் ஆகும் என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாகபட்டினத்தில் பயணிகள் முனையம் அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கியுள்ளதாகவும், பணிகள் முடிவடைய இன்னும் 4 முதல் 5 மாதங்கள் ஆகும் என்றும் அதிகாரிகள் கூறினர்.

ஆனால், ஒக்டோபர் மூன்றாவது வாரத்தில் தொடங்கும் வடகிழக்கு பருவமழையின் நிலையைப் பொறுத்து கால அளவு மாறலாம் என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக இந்திய வெளியுறவு அமைச்சகம் 8 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது .

நாகப்பட்டினம் போன்ற சிறிய துறைமுகங்களை பராமரிக்கும் தமிழ்நாடு கடல்சார் வாரியம் எதிர்காலத்தில் இத்தொகையை பெறும். (அ)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான குடியிருப்பில் 42 வீடுகளில் வெளியார்!

கொழும்பு, ஜூலை 25

மாதிவலையில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வீடமைப்புத் தொகுதியில் இருக்கும் 42 வீடுகளில் வெளியார் குடியிப்பதாக தெரியவந்துள்ளது.

இந்த நிலைமையானது பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பதால், அந்த வீடுகளில் வசித்து வருபவர்கள் தொடர்பில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன அறிக்கை ஒன்றை கோரியுள்ளதாக கூறப்படுகிறது.

வீடுகளில் குடியிருக்கும் வெளியார் சம்பந்தமாக அந்த வீடுகளை வாடகைக்கு பெற்றுக்கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட உள்ளது.

மாதிவலை வீடமைப்புத் தொகுதிக்குள் கடந்த 19 ஆம் திகதி நபர் ஒருவர் செல்ல முயற்சித்த சம்பவம் தொடர்பில் பாதுகாப்பு தரப்பினர் மத்தியிலும் ஒரு பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்தது.

குறித்த நபர், இராணுவத்தினர் தங்கியிருந்த வீட்டுக்கு சென்றிருந்ததாக கூறப்படுகிறது. அந்த வீட்டுக்கு அருகில் குடியிருந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் விடுத்த கோரிக்கையை அடுத்து இராணுவத்தினர் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

மாதிவலை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான குடியிருப்பு தொகுதியில் 120 வீடுகள் இருக்கின்றன.

இவற்றில் 111 வீடுகள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காகவும் எஞ்சிய வீடுகள் பாதுகாப்புப் பிரிவின் உறுப்பினர்கள் மற்றும் அங்கு தொழில் புரியும் ஊழியர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆயிரம் ரூபா மாத வாடகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த வீடுகளை பெற்றுக்கொள்ளும் வசதி ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது. (அ)

# மனித உரிமைக்காக குரல் கொடுப்பதை கனடா அரசு ஒருபோதும் நிறுத்திவிடாது!

## பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவிப்பு

ஒட்டாவா, ஜூலை 25

**இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கும் அத்துமீறல்களுக்கு பொறுப்புக்கூறப்படவேண்டும் என நாங்கள் தொடர்ந்து கோருகின்றோம். மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதை கனடா ஒருபோதும் நிறுத்தாது என கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.**



கறுப்பு ஜூலையின் 40ஆவது ஆண்டை நினைவு கூர்ந்து அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாற்பது வருடங்களுக்கு முன்னர் இலங்கையெங்கும் தமிழர்களுக்கு எதிராக கொடூரமான கொலைகள் புரியப்பட்டன. இவற்றில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் உயிரிழந்து பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்தார்கள், இடம்பெயர்ந்தார்கள், பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டார்கள். கறுப்பு ஜூலையின் கொடுமை, பதற்றத்தை அதிகரித்து ஆயுத மோதலாக மாறியது. இதன் மனப்பாதிப்பை சமூகங்கள் தற்போதும் அனுபவிக்கின்றன. சோகமான இந்த நாளில் நாம் தமிழ் கனேடியர்களுடனும் உலகம் எங்கிலும் உள்ள தமிழ் சமூகங்களுடனும் இணைந்து பாதிக்கப்பட்டவர்களை நினைவேந்தி தப்பிப்பிழைத்தோரை கௌரவிப்பதுடன் வெறுப்பிற்கும் வன்முறைக்கும் எதிராக எப்போதும் குரல்கொடுப்பதற்கு உறுதியுடன் இருப்பதை மீள வலியுறுத்துகின்றோம். மே 18ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாக பிரகடனம் செய்யும் பிரேரணையை கனேடிய நாடாளுமன்றம் ஒருமனதாக அங்கீகரித்து இவ்வாண்டில் இந்த நாள் முதல்முறையாக கடைப்பிடிக்கப்பட்டது. இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கும் அத்துமீறல்களுக்கும் பொறுப்புக்கூறப்படவேண்டும் என நாங்கள் தொடர்ந்து கோருகின்றோம். மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதை கனடா ஒருபோதும் நிறுத்தாது - என்றார். (அ)

# கட்டைக்காட்டில் கடற்படைக்கு காணி அளவிடும் முயற்சி நேற்று முறியடிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 25

கட்டைக்காடு பகுதியில் கடற்படைக்காக காணி அளவிடும் முயற்சி காணி உரிமையாளர், பிரதேச மக்கள் மற்றும் அரசியல்வாதிகளால் நேற்று தடுத்து நிறுத்தப்பட்டது.



தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியை கடற்படைக்கு சுவீகரிப்பதற்காக நில அளவைத் திணைக்களத்தினர் நேற்று காலை 9 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து குறித்த பகுதிக்கு சென்றிருந்தனர்.

அவர்களை இடைமறித்த காணி உரிமையாளர், கிராம மக்கள், அரசியல்வாதிகள் இது எங்கள் சொந்த காணி, இதனை அளவீடு செய்வதற்கு அனுமதிக்க முடியாது என எதிர்ப்பு தெரிவித்தனர். நில அளவை அதிகாரி தனக்கு எழுத்து மூலமாக கடிதம் ஒன்றைத் தருமாறு காணி உரிமையாளரிடம் தெரிவித்தார்.

காணி உரிமையாளர், வடமராட்சி கிழக்கு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மகாசபை தலைவர் இரத்தினசிங்கம் முரளிதரன், வடமராட்சி கிழக்கு மக்கள் ஒன்றியத்தின் தலைவர் செல்வன் ஆகியோர் ஒப்பமிட்டு கடிதத்தை வழங்கினர்.

இந்நிலையில் குறித்த காணி அளவீடு செய்வதை நிறுத்திவிட்டு நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை, வடமராட்சி கிழக்கில் நேற்றிலிருந்து தொடர்ச்சியாக ஐந்து தினங்கள் கடற்படைக்கான காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் இடம்பெற உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுவீகரிக்கப்படவுள்ள அனைத்து காணிகளும் தனியாருக்கு சொந்தமானவை என மக்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# பொருளாதார குற்றவாளிகளுக்கு எங்கள் அரசின் கீழ் தண்டனை!

## சம்பிக்க ரணவக்க கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 25

நாட்டை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ள பங்களிப்பு செய்த அரசியல்வாதிகள், அதிகாரி உட்பட அனைவரையும் ஐக்கிய குடியரசு முன்னணியின் அரசாங்கத்தின் கீழ் பொருளாதார குற்ற விசாரணை ஆணைக்குழுவின் முன் நிறுத்தித் தண்டனை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கண்டி சஹஸ் உயனவில் நடைபெற்ற ஐக்கிய குடியரசு முன்னணியின் கண்டி மாவட்ட மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் வாழும் 65 லட்சம் குடும்பங்களை வீதியில் இழுத்து போட்டுள்ள பொருளாதார குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படாதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மூன்று வருடங்களின் முன்னேற்றமான நிலைமையை நோக்கி கொண்டு வரும் வேலைத்திட்டம் ஐக்கிய குடியரசு முன்னணியிடம் இருக்கின்றது.

நாட்டுக்கு சுமார் 15 ஆயிரம் மருந்துகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இவற்றில் மூன்றில் ஒன்று அத்தியவசியமற்ற மருந்துகள். இந்த மருந்துகளில் மேலும் மூன்றில் ஒரு சத வீத மருந்துகளை இலங்கையிலேயே தயாரிக்க செய்ய முடியும்.

அத்தியவசியமான மற்றும் அத்தியவசியமற்ற மருந்துக்களை தெளிவாக பிரித்து அடையாளம் காண வேண்டும்.

நாட்டில் தயாரிக்கக் கூடிய மருந்துகளில் ஒரு பகுதியையேனும் நாட்டில் தயாரிப்பது குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷவே நாட்டின் பொருளாதாரத்தை அழித்த பிரதான சூத்திரதாரி,எதிர்க்கட்சியில் இருக்கும் சிலர் இந்த பெயரை கூறவும் அஞ்சுகின்றனர்.

தந்தையிடம் இருந்து, மகனுக்கு, மகளுக்கு, மனைவிக்கு அல்லது மருமகனுக்கு செல்லும் அரசியல் நடைமுறையை நிறுத்துவதற்கான முற்றுப்புள்ளியை வைக்க வேண்டும்.

கார்ல் மார்க்ஸ், லெனின், ஏங்கெல்ஸ் போன்றோரை முன்னிலைப்படுத்தி அரசியலில் ஈடுபடும் அணிகளால், நாட்டை கட்டியெழுப்பு முடியாது - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.